# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 25 வியாழக்கிழமை (11-10-2001)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:319


பிந்திய செய்தி

# நாடாளுமன்றம் நேற்று நள்ளிரவு கலைப்பு! டிசெ. 5 ஆம் திகதி புதிய பொதுத் தேர்தல்!!

கொழும்பு,ஒக்ரோபர்11

தற்போதைய நாடாளுமன்றத்தை நேற்று நள்ளிரவு 12 மணியுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலைத்தார்.

புதிய பொதுத் தேர்தல் எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெறும்.

பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் எதிர்வரும் ஒக்ரோபர் 25,26ஆம் திகதிகளில் ஏற்றுக்கொள்ளப்படும்.

புதிய நாடாளுமன்றம் அடுத்த ஆண்டின் முதல்நாளில் - புத்தாண்டு தினமான ஜனவரி முதலாம் திகதி - கூடும்

- தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க இத்தகவலை வெளியிட்டதாக இன்று அதிகாலை அறிவிக்கப்பட்டது.

அரசுத்தரப்பிலிருந்து பதின்மூன்றுக்கும் அதிகமான எம்.பிக்கள் எதிரணிப்பக்கம் தாவியதால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு நாடாளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மையை இழந்தது.

இதனால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியிலிருந்து மீளுவதற்காக தற்போதைய நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்துவிட்டுப் புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டிருக்கின்றார். இந்த உத்தரவு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று நள்ளிரவு வெளியாகவிருந்தது.

# 13 எம்.பிக்கள் கட்சி மாறியதால் அரசு பெரும்பான்மை இழந்தது!

கொழும்பு,ஒக்ரோபர்11

**ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலிருந்து நேற்றுமுன்தினமும் நேற்றுமாக மொத்தம் பதின்மூன்று எம்.பிக்கள் எதிர்க்கட்சிகளின் தரப்புக்கு மாறினர். இதனால் நாடாளுமன்றில் அரசு பெரும்பான்மைப் பலத்தை இழந்தது. இன்று நாடாளுமன்றத்தில் முன்னர் எதிர்பார்க்கப்பட்டபடி நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நடைபெறுமானால் அரசுத் தரப்பு தோல்வியடைந்து பதவியிழப்பது பெரும்பாலும் உறுதியாகி இருந்தது. எனினும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் இந்தத் தோல்வியிலிருந்து அரசு தப்பிப் பிழைத்துள்ளது,**

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து நேற்றுமுன்தினம் பந்துல குணவர்த்தனா எம்.பி. வெளியேறி எதிரணியில் சேர்ந்திருந்தார் என்பது தெரிந்ததே.

நேற்றுக்காலை நாடாளுமன்றம் கூடியபோது காலை 11.15 மணியளவில் பொ.ஐ.முன்னணியின் களுத்துறை மாவட்ட எம்பியான பராக்கிரம பந்துல குணவர்த்தனா அரசைக் கடுமையாக விமர்சித்து உரையாற்றினார். பின்னர் அரசுத் தரப்பிலிருந்து எழுந்து எதிரணிப் பக்கத்தை நோக்கி நடந்தார்.

அப்போது ஆளும் தரப்பு எம்.பியான மேர்வின் சில்வா முன்னால் ஓடிவந்து பராக்கிரம பந்துல குண

(14ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலுக்கு தயாராகிறது தேர்தல் திணைக்களம்

கொழும்பு,ஒக்.11

கொழும்பில் நேற்று அரசியல் மாற்றங்கள் ஒருபுறம் சூறாவளியாக வீசிக்கொண்டிருக்க, மறுபுறத்தில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் தேர்தல் ஆணையாளர் அவசர அவசரமாக ஈடுபட்டிருந்ததாக இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

தேர்தல் அதிகாரிகளைக் கடமையில் சேர்ப்பது தொடர்பான விண்ணப்பப் படிவங்களை அவசர அவசரமாக அச்சிட்டுத் தரும்படி அரசாங்க அச்சகத்தை தேர்தல் ஆணையாளர் அலுவலகம் கோரியுள்ளது.

எந்த நேரத்திலும் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாக தேர்தல் திணைக்கள உயரதிகாரி ஒருவர் நேற்று முன்னிரவு தெரிவித்தார். (உ)

## கலைக்கப்பட்ட நாடாளுமன்றில் அரச - எதிரணி எண்ணிக்கை

கொழும்பு,ஒக்.11

கலைக்கப்பட்ட நாடாளுமன்றில் அரசுத் தரப்பு மற்றும் எதிர்க்கட்சிகளின் தரப்பு ஆகியவற்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கை நேற்றைய கட்சித் தாவல்களின் பின்னர் பின்வருமாறு அமைந்திருந்தது:-

| கட்சி | அரசுத்தரப்பு | எதிரணி |
|---|---|---|
| ★ பொ.ஐ.மு | 97 | - |
| ★ ஜே.வி.பி. (எதிரணியில் இருந்து ஆதரவு) | 10 | - |
| ★ ஐ.தே.கட்சி (சபாநாயகர் உட்பட) | - | 89 |
| ★ பொ.ஐ.மு. அதிருப்தியாளர்கள் | - | 09 |
| ★ தமிழர் விடுதலைக் கூட்டணி | - | 05 |
| ★ ரெலோ | - | 03 |
| ★ தமிழ்க் காங்கிரஸ் | - | 01 |
| ★ சிஹல உறுமய | - | 01 |
| ★ இ.தொ.கா. | - | 04 |
| ★ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங். | - | 06 |
| மொத்தம் | 107 | 118 |

மேலும் பலர் அரசுத் தரப்பிலிருந்து எதிரணிக்கு மாறும் வாய்ப்பு இருந்தது குறிப்பிடத்தக்கது. (உ)

## கணேசமூர்த்தி எம்.பியும் கட்சி மாற இருந்தார்?

கொழும்பு,ஒக்.11

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியும் முன்னாள் பிரதி அமைச்சருமான ரி.கணேசமூர்த்தி இன்று நாடாளுமன்றம் கூடியிருக்குமானால் அரசுத் தரப்பிலிருந்து இன்று எதிர்க்கட்சிக்கு மாறியிருப்பார் என நேற்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நாடாளுமன்றம் நேற்றுக் கலைக்கப்பட்டதால் இந்தக் கட்சித் தாவல் இடம்பெற வாய்ப்பில்லாமல் போயிற்று.

ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் இவரை ஒருசில தினங்களுக்கு முன்னர் அழைத்துச் சென்று ஐ.தே.கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடியாக உரையாடச் செய்த

(2ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பதவியிலிருந்து தொண்டமான் இராஜினாமா!

கொழும்பு,ஒக்.11

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கால்நடைகள், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராகப் பணியாற்றியவருமான ஆறுமுகம் தொண்டமான் நேற்று தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

எதிர்க்கட்சித் தரப்பில் அமர்ந்திருந்து, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களிக்கத் தமது கட்சி முடிவு செய்திருந்ததாக அவர் நேற்றுக் கூறினார்.

ஆறுமுகம் தொண்டமான் நேற்று தமது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்தார். அவரது இராஜினாமாவை ஜனாதிபதி குமாரதுங்க ஏற்றுக்கொண்டார்.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தில் தனக்கு அளிக்கப்பட்ட ஒத்துழைப்புக்காக தமது இராஜினாமாக் கடிதத்தில் நன்றி தெரிவித்த ஆறுமுகம் தொண்டமான், சிறுபான்மையினரின் தேவைகள் குறித்து நன்கு புரிந்துகொண்ட தலைவர் தாங்கள் என்பதை ஜனாதிபதி என்ற முறையில் பல செயல்கள் மூலம் நிரூபித்துள்ளீர்கள் என ஜனாதிபதிக்கு புகழாரமும் சூட்டியுள்ளார்.

"எனது பேரனார் அவர்களின் மறைவின்போதும், பின்னரும் நீங்கள் எமக்குக் காட்டிய கௌரவத்துக்கு என்றும் நன்றியுடையோம். ஆழ்ந்த கவலையோடு பிரிகின்றோம்" - என்றும் ஆறுமுகம் தொண்டமான் தமது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

இராஜினாமாச் செய்வதற்கு முன்னர் நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் பிரதி அமைச்சர் மங்கள சமரவீரவுடன் தொண்டமான் இரண்டு மணிநேரம் உரையாடினார்.

பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும், எஸ்.பி. திஸநாயக்காவுடனும் அவர் பேச்சு நடத்தினார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்துப் பிரிவு ஊழியர் நேற்றுக் காலை சுட்டுக் கொலை!

### கஸ்தூரியார் வீதி - நாவலர் வீதிச் சந்தியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

போக்குவரத்துக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் மீது இனந்தெரியாதோர் நேற்று மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்றுக்காலை 8.35 மணியளவில் கஸ்தூரியார் வீதி - நாவலர் வீதிச் சந்தியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டை, பிடாரியம்மன்

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஹர்த்தாலுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.11

வீதிப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவு ஊழியர் ஒருவர் சுடப்பட்டதை ஒட்டி இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படியும் -

அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள், வியாபார நிலையங்கள், பாடசாலைகள் என்பனவற்றை மூடி ஒத்துழைப்பு வழங்கும்படியும் -

யாழ். மாவட்ட வீதிப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவு கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பிரிவின் பெயரில் "குடாநாட்டு மக்களுக்கு ஒரு வேண்டுகோள்" என்ற தலைப்பில்

(2ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நமது வேலை தேசவிரோதச் செயலா? தெளிவுபடுத்தக் கோருகின்றனர் ஊழியர்

## போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவு கண்டன அறிக்கை

தங்களது வேலை தேசவிரோதச் செயலா என்பதைத் தெளிவுபடுத்துமபடி வீதிப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவு கோரியுள்ளது.

"வீதிப் போக்குவரத்துப் பாதுகாப்புப்பிரிவு, வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு, மணியம் கட்டடம், எப்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்" என்ற முத்திரையுடன் நேற்று உதயனுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கண்டன அறிக்கை ஒன்றிலேயே இப்படிக் கோரப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் ஸ்ரீஸ்கந்தராசா விமலேஸ்வரன் இனந்தெரியாத ஆயுதபாணிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இரத்த வெள்ளத்தில் துடிதுடிகக - கேட்பார் அற்ற நிலையில் - விமலேஸ்வரன் சுடப்பட்டுக்கிடந்தார்.

இவர் சுடப்பட்டதற்குக் காரணம் என்ன? இவர் செய்த குற்றம் யாது? போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவில் ஈடுபட்டது ஒரு குற்றமா? போக்குவரத்துப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அனைவரும் தேசவிரோதிகளா? நாம் யாரைக் காட்டிக்கொடுத்தோம்? எந்த தேசவிரோதக் கும்பலுக்குத் துணைபோனோம்? நாமும் இம்மண்ணில் பிறந்த தமிழர்கள் தானே? எமக்கும் குடும்பங்கள் உண்டு. நாம் பாடசாலை வாழ்க்கையை முடித்துவிட்டு வேலையற்ற நிலையில் எமது குடும்பத்துக்குப் பாரமாக இருந்த நாள்கள்தான் அதிகம். எமது குடும்பத்தின் பாரம் குறைய - எமது குடும்பத்தின் வறுமை நீங்க - எமது குடும்பத்தின் பட்டினிச் சாவு மறைய - எமது குடும்பம் அன்றாடம் இரண்டு வேளையாவது உணவு உண்ண- வேண்டும் என்பதற்காகவே இவ் வேலைவாய்ப்பில் வந்து இணைந்தோம். இவ்வேலைவாய்ப்பு எமது குடும்பத்துகக்கு மட்டுமன்றி வீதியில் அன்றாடம் போக்குவரத்தில் ஈடுபடும் மக்களுக்கும் நன்மையளிக்கக் கூடியதாகவே அமைந்தது.

நாம் இப்பணியில் ஈடுபடும் காலத்தில் இருந்து போக்குவரத்து நெரிசல்கள், வீதி விபத்துக்களால் ஏற்படும் உயிர்ச்சேதங்கள் என்பவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் - நன்மை செய்யும் - செயற்பாடுகளிலேயே நாம் செயற்பட்டு வந்தோம். இது மாபெரும் தவறாகுமா? அல்லது இது தேசவிரோதமா? நாம் எவருக்கு எதிராகவும் ஆயுதம் தூக்கவும் இல்லை. எவருக்கு ஆதரவாகவும் பிரசாரம் செய்யவும் இல்லை.

இப்படியாக செயற்பட்டு வந்த எமக்கு மரணந்தானா பரிசு? நாம் இவ்வாறு செயற்படுவதை ஒரு தேச விரோதச் செயலாகக் கருதினால் செய்தி ஊடகங்கள் ஊடாகவேனும் அது பற்றிய விவரத்தை எமக்கு அறியப்படுத்துங்கள்.

எமது குடும்பம் வறுமையின் நெருக்குதலில் மாட்டிக்கொண்டாலும் - நாம் பட்டினிச்சாவில் வீழ்ந்தாலும் - ஒரு வேளைதானும் உணவு கிடைக்காமல்போனாலும் - அது பற்றி எமக்கு அக்கறை இல்லை. நாம் தேசவிரோதிகள் என்ற பெயருடன் மரணத்தை தழுவாது இருந்தால் போதும். ஆகவே எம்மை தேசவிரோதிகள் என நினைத்து எம்மீது மரண வேட்டுக்களை தீர்க்கும் நம்மவர்கள் இதற்கு பதில் கூறட்டும்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எஸ்.பி.திஸநாயக்காவின் மகன் நேற்றுக் கொழும்பில் கைது!

முன்னாள் அமைச்சரும் எம்.பியுமான எஸ்.பி.திஸநாயக்காவின் மகன் நேற்றுக்காலை கொழும்பில் வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் வெலிக்கடைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பொலீஸார் ஒருவரைக் காரினால் மோதினார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டிருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற பாதுகாப்புக் கடமையில் இருந்த அந்தப் பொலீஸாரை எஸ்.பி.திஸநாயக்காவின் மகன், தான செலுத்திவந்த - அரசுக்குச் சொந்தமான - காரினால் மோதியதாகக் கூறப்பட்டது. (ம-4)

## கணேசமூர்த்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் -

அந்தச் சமயத்திலே கட்சி மாற அவர் இணக்கம் தெரிவித்ததாகவும் - அறியவந்தது.

இன்று நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் எடுக்கப்படுமானால் அப்போது கணேசமூர்த்தி எதிரணியில் வந்து அமர்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசுத் தரப்புக்கு ஆதரவளித்து வரும் தமிழ்த் தரப்பு ஒன்று சார்பான எம்.பி. ஒருவர், நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று வாக்கெடுப்புக்கு விடப்படுமானால், அப்போது வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் விடுவதன் மூலம், அரசின் காலை வாருவதற்கு ஐ.தே.கட்சித் தலைவர்களிடம் உறுதியளித்திருப்பதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ)

## போக்குவரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோயிலடியில் வசித்துவந்த ஸ்ரீஸ்கந்தராசா விமலேஸ்வரன் (வயது19) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை யாழ்நீதிமன்ற பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் மேற்கொண்டார். மரணவிசாரணை மற்றும் பிரேத பரிசோதனையின் பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றுக் காலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து யாழ் நகரப் பகுதியில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவு ஊழியர்கள் எவரும் தமது கடமைகளில் ஈடுபடவில்லை.(ம-4-10-15-17-139-173)

## ஹர்த்தாலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பிவைக்கப்பட்ட பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வீதிப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவில் உத்தியோகத்தராகப் பணியாற்றிய எங்கள் இனிய நண்பன் ஸ்ரீஸ்கந்தராசா விமலேஸ்வரனின் அகால மரணத்தையிட்டு யாழ்குடாநாடு முழுவதும் துக்கத்தில் அனுஷ்டித்து எங்களுடன் ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என நம்புகிறோம்.

நாங்கள் உங்களுக்காகவே வீதிகளில் தொண்டராக ஈடுபட்டிருந்த வேளையில், இனந்தெரியாத நபரினால் இவர் கொடூரமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு நடு வீதியில், இரத்த வெள்ளத்தில் பரிதாபகரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

ஏன் இந்த அவலம்? ஒரு கணம் யோசித்துப்பாருங்கள்! நாங்கள் வேறு யாருமல்ல - உங்கள் பிள்ளைகள், வேலைக்காக மட்டுமல்லாமல் உங்கள்சேவைக்காகவும் வந்த எங்களுக்கு நடந்த இந்தத் துயரமான செயலுக்கு யார் காரணம்? நாங்கள் செய்த தவறு என்ன? நாங்கள் தேச விரோதிகளா?

கடந்த காலங்களில் நடந்த வீதி விபத்துக்கள் யாவும் நீங்கள் அறிந்ததே. இவ்வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் வண்ணம் நாங்கள் போக்குவரத்துக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளோம். இது தவறு எனக் கணிப்பிடப்படுமாயின் நாங்கள் இக்கடமையிலிருந்து விலகிநிற்க விரும்புகின்றோம். இதற்கு எம்மைத் தண்டித்தவர்களே பதில் சொல்லட்டும்.

எனவே 11.10.2001 இன்று வியாழக்கிழமை நாங்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் இறங்குகின்றோம். அதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### அமெரிக்கத் தாக்குதல்கள் தொடர்வதை அடுத்து

# புனிதப் போரை உடன் ஆரம்பிக்க பின்லேடனுக்கு தலிபான் அனுமதி!

அமெரிக்காவுக்கு எதிராகப் புனிதப்போரை ஆரம்பிப்பதற்கு ஒஸாமா பின்லேடனுக்கு தலிபான்கள் நேற்று அனுமதி வழங்கினர்.

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள் நேற்று நான்காவது நாளாகத் தொடர்ந்து இடம்பெற்றதை அடுத்தே தலிபான்கள் இந்த அனுமதியை வழங்கியிருந்தனர்.

"இஸ்லாமியர்களுக்கு எதிராக அமெரிக்கா நடத்திவரும் கொடிய போரினால் நிலைமைகள் மிகவும் மோசமடைந்து வருகின்றன. எனவே அமெரிக்கப் படைகளுக்கு எதிரான புனிதப்போரை ஆரம்பியுங்கள்."

- என்று தலிபான்களின் பெருந்தலைவர் முல்லா முஹமட் ஓமர் நேற்று பின்லேடனுக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

இதனையடுத்து ஒஸாமா பின்லேடன் மீது தலிபான்கள் விதித்திருந்த தடைகள் பல அகற்றப்பட்டுள்ளன. இவற்றில் பின்லேடன் தொலைத்தொடர்புக் கருவிகள், 'இன்ரர்நெற்' போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளதாக தலிபான் அரசு அறிவித்துள்ளது.

தலிபான்களின் இந்த அறிவிப்பை அடுத்து அமெரிக்காவுக்கு எதிரான புனிதப் போரில் வந்து இணைந்துகொள்ளுமாறு உலகெங்கும் உள்ள இஸ்லாமிய இளைஞர்களுக்கு ஒஸாமா பின்லேடன் அழைப்பு விடுத்துள்ளார். (ம-4)

# அமெரிக்கத் தாக்குதல் - ஒரு பார்வை





ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்க விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதல்களாலும், ஏவுகணைத் தாக்குதல்களாலும் சிதைந்து, சிதிலமடைந்து காணப்படும் ஆப்கானிஸ்தானியர்களின் வீடுகளைப் படங்களில் காணலாம். தரைமட்டமாக்கப்பட்டுள்ள தமது வீடுகளை ஆப்கானிஸ்தானியர்கள் சிலர் சோகமே உருவாகப் பார்வையிடுகின்றனர்.



தலிபான்களின் நிலைகளைத் தாக்க அமெரிக்க யுத்தக் கப்பலில் இருந்து புறப்பட்டுச் செல்லும் குண்டுவீச்சு விமானம்.





ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் இலக்குகளைத் தாக்குவதற்கு - குண்டுகளைப் பொருத்தியபடி - தயாரான நிலையில் அமெரிக்க யுத்தக்கப்பலில் தரித்து நிற்கும் போர் விமானங்களையும் அவற்றில் ஒன்று புறப்பட்டுச் செல்வதையும் முதலாவது படத்தில் காணலாம்.

தனது இலக்கைத் தாக்க ஆப்கன் மலைகளைத் தாண்டி சீறிப் பாயந்து செல்லும் அமெரிக்காவின் 'போரிடும் ராஜாளி' என வர்ணிக்கப்படும் 'எவ்-16' ரக யுத்த விமானத்தை அடுத்துள்ள படத்தில் காணலாம்.



அமெரிக்கா தலிபான் மீது தாக்குதல் நடத்தும் தருணத்தைப் பயன்படுத்தி காபூல் நோக்கி முன்னேறி வரும் வடக்கு எதிரணிக் கூட்டணித் துருப்புக்கள் தமது காவலரண் ஒன்றில் காத்திருக்கின்றன.




ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா நடத்திவரும் தாக்குதலைக் கண்டித்துப் பல்வேறு நாடுகளிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அத்தகைய ஆர்ப்பாட்டங்களின் போது பாகிஸ்தானின் கராச்சியில் துப்பாக்கி ஏந்திய சிறுவனையும், பிலிப்பைன்ஸில் அமெரிக்க தூதரகம் முன்பாக ஒருவர் அணிந்திருந்த முகமூடியையும், தென்கொரியாவில் அமெரிக்க படை முகாம் முன்பாக சுலோக அட்டையுடன் மாணவர் ஒருவரையும், காஷ்மீரின் ஸ்ரீ நகரில் பல்கலைக்கழக மாணவர்களையும், ஜப்பானில் அமெரிக்கத் தூதரகம் முன்பாக பொலீஸாருடன் மோதுபவர்களையும் படங்களில் காணலாம்.

### அமெரிக்காவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்:

# பாகிஸ்தானிய நகரங்களில் வன்முறை; ஸ்வெட்டாவில் ஐந்து பேர் உயிரிழப்பு!

இஸ்லாமாபாத்,ஒக்.11

பாகிஸ்தானின் 'ஸ்வெட்டா' நகரில் அமெரிக்க எதிர்ப்பாளர்கள் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள்மீது பொலீஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 5 பேர் கொலலப்பட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறையில் இறங்கியதாலேயே துப்பாக்கிச் சூடு நடத்தியதாகப் பாகிஸ்தானியப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருவதையடுத்து, பாகிஸ்தானில் அமெரிக்க எதிர்ப்பாளர்கள் வன்முறை ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். பெட்டா நகரில் 'யுனிசெவ்' அலுவலகம் அவர்களால் தீக்கிரையாக்கப்பட்டது. ஆப்கான் மீது தாக்குதல் தொடங்கியது முதல் -

பெடாபெஷாவர், கராச்சி, லாகூர் போன்ற நகரங்களில் வன்முறைகள் வெடித்துள்ளன. பல இடங்களில் நேற்றும் வன்முறைக் கலவரங்கள் தொடர்ந்தன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வாகனங்கள் மற்றும் பொதுக்கட்டடங்களுக்குத் தீ வைப்பது உட்பட வன்முறைகளில் ஈடுபடுவதாகவும் -

பெடாவில் பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்ததாகவும் - கூறப்படுகின்றது.

பிரதான நகரங்களில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு அமெரிக்க எதிர்ப்புணர்வுடன் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். அவர்களுடன் ஆப்கான் அகதிகளும் இணைந்துள்ளனர்.

இதற்கிடையில், மேற்காசியாவின் காஸா நிலப்பரப்பில் ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்த பலஸ்தீனர் மீது பலஸ்தீனப் பொலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு சிறுவர்கள் உயிரிழந்ததாகக் கூறப்படுகின்றது.

ஹமாஸ் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த அந்த ஆர்ப்பாட்டத்தில் முகமூடி அணிந்த அடையாளம் தெரியாதவர்களே சுட்டதாகப் பலஸ்தீனப் பொலீஸார் தெரிவித்தனர்.

(ஓ-4)

### சோவியத் போரில் தலிபான்களுக்கு

# அமெரிக்கா கொடுத்த ஏவுகணைகளால் அதன் விமானங்களுக்கே ஆபத்து!

அமெரிக்காவால் தமக்கு முன்னர் வழங்கப்பட்ட 'ஸ்ரிங்கர்' ஏவுகணைகளைக் கொண்டே தலிபான்கள் தற்போது அமெரிக்கக் குண்டுவீச்சு விமானங்களை நோக்கி ஏவுவதாகக் கூறப்படுகிறது.

1980களில் ஆப்கானிஸ்தானில் இருந்த சோவியத் இராணுவத்தை விரட்டியடிக்க, தலிபான்களுக்கு அமெரிக்கா 'ஸ்ரிங்கர்' விமான எதிர்ப்பு ஏவுகணைகளை அப்போது வழங்கியிருந்தது. சோவியத்துக்கு எதிரான போரில் பயன்படுத்தியவை போக, மிகுதியான 'ஸ்ரிங்கர்' ஏவுகணைகளை இத்தனை ஆண்டுகள் பத்திரமாக வைத்திருந்த தலிபான்கள், இப்போது அமெரிக்க விமானங்கள் மீது அவற்றைக் கொண்டே தாக்குவதாக அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

உந்து கருவியை தோளில்வைத்து 'ஸ்ரிங்கர்' ஏவுகணைகளை ஏவ முடியும். தற்போதைய தாக்குதலின்போது இதுவரை சுமார் 100 'ஸ்ரிங்கர்' ஏவுகணைகளைத் தலிபான்கள் ஏவியதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. (ஓ-4)

# பாகிஸ்தானிய அணு ஆயுதங்கள் தலிபான்களிடம் சிக்கும் அபாயம்

பிரிஸ்பேன்,ஒக்.10

பாகிஸ்தானிடம் உள்ள அணு ஆயுதங்கள் ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபான்களிடம் சிக்கிவிடும் அபாயம் உருவாகியுள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் அச்சம் வெளியிட்டார்.

பிரிஸ்பேனில் நடந்த 'நேட்டோ' நாடுகள் மற்றும் ரஷ்யா கலந்து கொண்ட மாநாட்டிலேயே அவர் இந்தப் பிரச்சினையை எழுப்பினார்.

அமெரிக்கா நடத்தும் தாக்குதல்களின் விளைவால் பாகிஸ்தானின் அணுஆயுதங்கள் தலிபான்களின் கைகளுக்குப் போய்ச்சேரும் அபாயம் எழுந்துள்ளதை அப்போது அவர் சுட்டிக்காட்டினார்.

தென்னாபிரிக்காவில் வெள்ளையர் ஆட்சி முடிவடைந்து பெரும்பான்மைக் கறுப்பினத்தவரிடம் ஆட்சி ஒப்படைக்கப்படுவதற்கு முன்பாக அங்கு 6 அணுகுண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டதைக் குறிப்பிட்ட ரஷ்ய அமைச்சர், பாகிஸ்தானில் தலிபான் ஆதரவாளர்கள் மூலம் அணு ஆயுதங்கள் கைப்பற்ற முன்னர் அவை செயலிழக்கச் செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். (ஓ)

### அமெரிக்காவின் அதிருப்திக்கு மத்தியில்

# ஐ.நா.பாதுகாப்புச் சபையில் உறுப்புரிமை பெற்றது சிரியா

### இரகசிய வாக்கெடுப்பில் வென்றது

நியூயோர்க்,ஒக்.11

அமெரிக்காவின் அதிருப்திக்கு மத்தியில் ஐ.நா.பாதுகாப்புச் சபையில் சிரியா அங்கத்துவம் பெற்றது. அதனுடன் மேலும் 4நாடுகளும் பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெற்றன.

ஐ.நா.பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற 10 அங்கத்துவ இடங்களில் ஐந்தைத் தேர்ந்தெடுப்பதற்கான இரகசிய வாக்களிப்பு கடந்த திங்கள் நடந்தது.

பங்களாதேஷ், ஜமெய்க்கா, மாலி, துனீசியா, உக்ரைன் ஆகியவற்றின் உறுப்புரிமைக்காலம் முடிவடைந்ததையடுத்து ஐ.நா.பொதுச் சபையின் அங்கத்துவ நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற 5 நாடுகளைத் தெரிவு செய்ய வாக்களித்தன.

இந்த வாக்கெடுப்பில், சிரியா, கமரூன், கினி, பல்கேரியா, மெக்ஸிகோ ஆகிய 5 நாடுகள் தெரிவு செய்யப்பட்டன.

பயங்கரவாதத்தை வளர்த்து, அதற்குத் துணைபோகும் நாடு என்று அமெரிக்காவால் குற்றஞ்சாட்டப்பட்டு வந்த சிரியா, 160 வாக்குகளைப் பெற்று பாதுகாப்புச் சபையில் இடம் பிடித்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள இந்த 5 நாடுகளும் 2003ஆம் ஆண்டு ஜனவரி மாதம்வரை பாதுகாப்புச் சபையில் உறுப்புரிமை வகிக்கவுள்ளன.

ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட கொலம்பியா, சிங்கப்பூர், மொரீஸியஸ், அயர்லாந்து ஆகிய 5 நாடுகளும் 2003 ஆம் ஆண்டுவரை பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கவுள்ள மற்றைய நாடுகளாகும்.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றை நிரந்தர உறுப்பு நாடுகளாகக் கொண்ட ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தரமற்ற 10 உறுப்பு நாடுகள் வாக்களிப்பின் மூலம் தெரிவுசெய்யப்படுகின்றன. அதில் அரபு நாடு ஒன்றுக்கு ஓர் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்துக்காகவே சிரியா போட்டியிட்டது.

### உலக அரங்கில்

ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா மற்றும் பிரிட்டன் வான் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி வரும் வேளையில், ஐ.நா.பாதுகாப்புச் சபையில் சிரியா அங்கம் வகிப்பது அமெரிக்காவுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தக்கூடும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஓ-4)

### தலிபான் கட்டுப்பாட்டிலிருந்த

# பிரதான விநியோகப் பாதையை வடக்குக் கூட்டணி கைப்பற்றியது

ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான்களை எதிர்த்துப் போராடி வரும் வடக்குக் கூட்டணி, தலிபான்களின் பிரதான விநியோகப் பாதையைத் தாம் துண்டித்துவிட்டதாக அறிவித்துள்ளது.

நாட்டின் வடக்கு - தெற்கு பகுதிகளை இணைக்கும் இந்தப் பாதையை கடந்த திங்கட்கிழமை இரவு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாக வடக்குக் கூட்டணி தெரிவித்தது.

அந்தப் பாதையைக் காத்துநின்ற சுமார் 1200 தலிபான் வீரர்களும் 40 தலிபான் தளபதிகளும் தம்முடன் இணைந்துகொண்டதாகவும் - அதனால யுத்தமின்றியே விநியோகப் பாதையைத் தாம் கைப்பற்றியதாகவும் - வடக்குக் கூட்டணியினர் தெரிவித்தனர்.

இதேவேளை அமெரிக்காவின் வான் தாக்குதலைப் பயன்படுத்திக் கொண்டு வடக்குக் கூட்டணிப் படைகள், பர்கிஸ், ஹேறாஸ், பயித் மற்றும் சமகன் ஆகிய தலிபான் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கித் தமது தரைவழித் தாக்குதலை ஆரம்பித்துள்ளது.

தலைநகர் காபூலுக்கு வடக்கே, சுமார் 40 கிலோ மீட்டர்கள் தொலைவில் வடக்குக் கூட்டணிப் படைகளுக்கும், தலிபான் படைகளுக்கும் இடையே மோதல் இடம்பெற்றுவருவதாகக் கூறப்படுகிறது. (ஓ)

### இரகசிய இடத்தில் அமெரிக்க உதவி அதிபர்

வாஷிங்ரன்,ஒக்.11

பாதுகாப்புக் காரணங்களுக்காக அமெரிக்க உதவி ஜனாதிபதி டிக் செனி இரகசிய இடம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல் ஆரம்பிப்பதற்கு சில மணித்தியாலங்கள் முன்னதாக அவர் இரகசிய இடமொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

### சொத்துகளை முடக்க ஐ.நா. உத்தரவு

நியூயோர்க்,ஒக்.11

பயங்கரவாதத்துக்கு உதவும் மற்றும் மேற்கொள்ளும் 27 அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் சொத்துக்களை முடக்கி வைக்குமாறு தனது உறுப்பு நாடுகளை ஐ.நா. கேட்டுள்ளது.

ஒசாமா பின்லேடனும், அவரது 'அல்கெய்டா'வும் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் இருப்பதாக ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ)

# 'விமானங்களின் புயல்' ஓயாது என அமெரிக்கர்கள் புரிந்துகொள்வர்

### இப்படிக் கூறுகிறது 'அல்கெய்டா'

'விமானங்களின் புயல்' நிற்காது இனித் தொடரும் என்பதை அமெரிக்கர்கள் புரிந்துகொள்வார்கள் என்று பின்லேடனின் அல்கெய்டா அமைப்பு எச்சரித்தது.

கட்டார் தொலைக்காட்சியில் பேசிய அல்கெய்டா செய்தித் தொடர்பாளர் லெய்மான் அபு கேட் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

கடந்த மாதம் அமெரிக்காவில் நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதல்களையே அவர் 'விமானங்களின் புயல்' என்று குறிப்பிட்டார்.

ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா மேற்கொள்வது, பகிரங்கப் பயங்கரவாதம் என்றும் -

ஆகவே அமெரிக்காவுக்கு எதிரான புனிதப் போருக்கு அனைத்துலக முஸலிம்களும் ஆதரவு தரவேண்டுமென்றும் - லெய்மான் அறைகூவல் விடுத்தார்.

ஆயிரக்கணக்கான மக்கள் சாவை எதிர்நோக்குவதைப் போலவே, அமெரிக்கர்களும் எதிர்நோக்குவதாகவும் அவர் கூறினார்.

(ஓ)

### அமெரிக்கத் தாக்குதல் குறித்த

# இரகசியத் தகவல்களை வெளியிட புஷ் தடை

வாஷிங்ரன்,ஒக்.11

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை தொடர்பான இரகசியங்கள் பேணப்படும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள ஜேர்மனிய அதிபருடன் இணைந்து செய்தியாளர்களைச் சந்தித்தபோதே புஷ் இவ்வாறு குறிப்பிட்டார்.

போர் தொடர்பான இரகசியத் தகவல்களைச் சில பத்திரிகைகள் வெளியிடுவது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமென்றும் -

அமெரிக்கப் படையினர் ஆபத்தை எதிர்நோக்கியபடி தாக்குதலை மேற்கொண்டிருக்கும்போது; இரகசியத் தகவல்கள் வெளியிடப்படுவது தகாத செயல் என்றும் - அதிபர் புஷ் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்கப் படைகள் நடத்தவிருந்த தாக்குதல்கள் மற்றும் அதற்கு எதிர்த்தரப்பு நடத்தக்கூடிய பதில் தாக்குதல் என்பன பற்றி அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் சிலர், செனட் சபை உறுப்பினர்களிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. இத்தகவல்களை வைத்து, செனட் சபையில் சில உறுப்பினர்கள் அதிபரை தர்மசங்கடத்தில் மாட்டும் வகையில் உரையாற்றியிருந்தனர்.

இதனையடுத்து, பென்டகன், சி.ஐ.ஏ., எவ்.பி.ஐ., நீதித் திணைக்களம் ஆகிய பாதுகாப்புடன் தொடர்புடைய அமைப்புகள் அரசு குறிப்பிடுவோருக்கு மட்டுமே இரகசியத் தகவல்களைத் தெரிவிக்க வேண்டுமென்று அதிபர் புஷ் உத்தரவிட்டார்.

## யாழ்ப்பாணம் - மாநகரசபை

சந்தைகள், இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2002

இதன்கீழ் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள சந்தைகள், இறைச்சிக் கடைகள் மற்றும் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் ஆகியவற்றை 01. 01. 2002 முதல் 31. 12. 2002 வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளராகிய என்னால் 26.10 .2001 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2. 00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கேள்விப் பிணைப் பணமும், கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 250 / - உடன் பண்டங்கள் சேவைகள் வரி ரூபா 31. 25 யும் சேர்த்து செலுத்துவதன் பேரில் 25. 10. 2001 ஆந் திகதி வியாழக்கிழமை பி. ப. 3. 00 மணிவரையும் யாழ். மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான படிவங்களின் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு 26. 10. 2001 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''..........'' கேள்விக்கான விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும். தபாலில் அனுப்பப்படும் போது ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கேள்விகள் 26-10-2001 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணிக்கு கேள்விச் சபையினால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் சமுகமளிக்க முடியும். மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

### அட்டவணை

1) சந்தைகள் :-

| (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு உட்பட) | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (ஜி.எஸ்.ரி. நீங்கலாக) |
|---|---|---|
| 1. பெரிய கடை மரக்கறிச்சந்தை | 5000.00 | 325000.00 |
| 2. கொட்டடி மீன்சந்தை (கொட்டடி/பண்ணை) | 5000.00 | 2210000 00 |
| 3. குருநகர் சந்தை | 5000.00 | 480800.00 |
| 4. செங்குந்தா சந்தை | 5000 00 | 387400.00 |
| 5. நாவாந்துறை சந்தை | 2500.00 | 60000.00 |
| 6. அரியாலை சந்தை | 3000.00 | 126000.00 |
| 7. பாசையூர் சந்தை | 2500 00 | 36100.00 |
| 8. கொழும்புத்துறை சந்தை | 1000.00 | 2200.00 |

| 2) துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (ஜி. எஸ். ரி. நீங்கலாக) |
|---|---|---|
| 1. கஸ்தூரியார் வீதி துவிச்சக்கரவண்டிப்பாதுகாப்பு நிலையம் | 2500.00 | 18200.00 |

| 3) இறைச்சிக்கடைகள் | இல. | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகை (ஜி. எஸ். ரி. நீங்கலாக) | ஜி.எஸ்.ரி. நீங்கலாக மாத வாடகை |
|---|---|---|---|---|
| 1. கொட்டடி ஆட்டிறைச்சிக் கடை | 01 | 2500.00 | 23200 00 | 123.75 |
| 2. ,, ,, | 02 | 2500.00 | 25600.00 | 112.50 |
| 3. ,, ,, | 03 | 2500.00 | 30200 00 | 112.50 |
| 4. ,, ,, | 04 | 2500 00 | 21100.00 | 112.50 |
| 5. ,, ,, | 05 | 2500.00 | 20400.00 | 112.50 |
| 6. ,, ,, | 06 | 2500.00 | 19700.00 | 112 50 |
| 7. ,, ,, | 07 | 2500.00 | 27200.00 | 112.50 |
| 8. ,, ,, | 08 | 2500.00 | 19200.00 | 112.50 |
| 9. குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 01 | 2500.00 | 76600.00 | 195.00 |
| 10. ,, ,, | 02 | 2500.00 | 62200.00 | 195 00 |
| 11. ,, ,, | 03 | 2500.00 | 66200.00 | 195.00 |
| 12. ,, ,, | 04 | 2500.00 | 41500.00 | 195 00 |
| 13. ,, ,, | 05 | 2500.00 | 47700.00 | 195.00 |
| 14. ,, ,, | 06 | 2500.00 | 44000.00 | 195 00 |
| 15. ,, ஆட்டிறைச்சிக் கடை | 07 | 2500.00 | 8000.00 | 195.00 |
| 16. நரிக்குண்டு மாட்டிறைச்சிக்கடை | 01 | 5000.00 | 90000.00 | 135.00 |
| 17. செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | 01 | 2500.00 | 32500.00 | 112.50 |
| 18. ,, ,, | 02 | 2500.00 | 25500.00 | 112.50 |
| 19. பாஷையூர் மாட்டிறைச்சிக் கடை | 01 | 2500.00 | 48500.00 | 135.00 |
| 20. ,, ,, | 03 | 2500.00 | 35500.00 | 135.00 |
| 21. அரியாலை ஆட்டிறைச்சிக் கடை | 01 | 2500.00 | 17100.00 | 135.00 |
| 22. ,, மாட்டிறைச்சிக் கடை | 02 | 2500.00 | 36400.00 | 135.00 |
| 23. நாவாந்துறை ,, | 01 | 2500.00 | 25100.00 | 200.00 |
| 24. நாவாந்துறை ,, | 02 | 2500.00 | 9600.00 | 200.00 |
| 25. ,, ,, | 03 | 2500.00 | 15100.00 | 200.00 |
| 26. ,, ,, | 04 | 2500.00 | 6100.00 | 200.00 |
| 27. ,, ,, | 05 | 2500.00 | 8100.00 | 200.00 |
| 28. ,, ,, | 06 | 2500.00 | 5300.00 | 200.00 |
| 29. ,, ,, | 07 | 2500.00 | 9700.00 | 200.00 |
| 30. ,, ஆட்டிறைச்சிக்கடை | 08 | 2500.00 | 3700.00 | 200.00 |
| 31. ,, மாட்டிறைச்சிக் கடை | 09 | 1500.00 | 5000.00 | 200.00 |
| 32. ,, ,, | 10 | 1500.00 | 5000.00 | 205.00 |
| 33. ,, கருவாட்டுக்கடை | 11 | 1000.00 | 3050 00 | 200.00 |
| 34. ,, ,, | 13 | 1000.00 | 3000.00 | 200.00 |

முக்கிய குறிப்பு:-

1. தற்போது குத்தகை/வாடகை நிலுவைப்பணம் செலுத்த வேண்டியவர்களும், ஏற்கனவே தவறுநர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களும் கேள்விப்படிவம் பெற அருகதையற்றவர்களாவர்.
2. அத்துடன் கேள்விக்காரர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகையுடன் மேலதிகமாக பண்டங்கள், சேவைகள் வரியான 12. 5 % ஐயும் சேர்த்து செலுத்துதல் வேண்டும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

இ. இராமலிங்கம்
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம். (சி/18635)

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 2001.10.09

## தகுந்த சிகிச்சை அளிக்கத் தவறியதால்

# விபத்தில் காயமடைந்தவர் காலை இழந்த பரிதாபம்!

சுமார் ஒருமாதத்திற்கு முன் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி கால்பாதத்தில், (புறங்கால்) உட்காயமடைந்த ஒருவர் தகுந்த சிகிச்சையை மேற்கொள்ளத்தவறியமையினால் ஒருகாலை இழந்தார்.

கடந்த மாதம் 2 ஆம் திகதி குடத்தனைப் பகுதியில் விபத்துக்குள்ளான, வரணியைச் சேர்ந்த நாகன் செல்வராசா (வயது 52) என்பவரே இடது கால் முழங்காலுக்குமேல் இழந்தவராவார்.

அரிசி மூடையுடன் மோட்டார் சைக்கிளைச் செலுத்திக் கொண்டு சென்றவேளை விபத்துக்குள்ளாகி சரிந்து விழுந்த போது காலில் உட்காயம் ஏற்பட்டது.

நோவுதான் என எண்ணி அதற்கான எண்ணெயைப் பூசிவந்துள்ளார் மூன்று நாள்களின் பின் நடக்க முடியாத நிலை ஏற்பட்டதும், வடமராட்சி ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கே பி. ஒ. பி. போட்டு சிகிச்சைக்குட்படுத்திய நிலையில் கால் மேலும் வீக்கமடைந்து, தோல் வெடித்து நீர் (ஊனம்) வடியத்தொடங்கியதை அடுத்து பி ஓ. பி அகற்றப்பட்டு புண்ணுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

அச்சிகிச்சை பயனளிக்காது வருத்தம் (நோய்) அதிகரித்துக் கொண்டே வந்ததை அடுத்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

அங்கே அதற்கான சிகிச்சையை மேற்கொண்ட சத்திர சிகிச்சை நிபுணர், கால் முழுவதும் கிருமித் தொற்று ஏற்பட்டு பழுதடைந்திருப்பதைக் கண்டுபிடித்து நோய் மேலும் பரவாதவகையில் அக்காலை முழங்காலுக்கு மேல், சத்திரசிகிச்சை மூலம் துண்டித்து சிகிச்சையை ஆரம்பித்துள்ளார்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பும் இதுபோல உட்காயமடைந்து 'புக்கை' கட்டி சிகிச்சை பெற்ற ஒருவர், கிருமித் தொற்றுக்கிலக்காகி அது உடல் முழுவதும் பரவிய நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்ததும தெரிந்ததே. (க-15)

## காரைநகரில் 'பாதைச் சேவை' இடைநிறுத்தம்

காரைநகர், ஒக். 11

காரைநகருக்கும், ஊர்காவற்றுறைக்கும் இடையில் கடற்படையினரால் நடத்தப்பட்டு வந்த 'பாதைச் சேவை' கடந்த சில வாரங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

'பாதை' பழுதடைந்த காரணத்தினால் அதனைத் திருத்துவதற்காகவே இச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

தற்போது படகு ஒன்றே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவையில் ஈடுபட்டு வருவதனால், அரச ஊழியர்களும், பொதுமக்களும் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன், பல மணி நேரம் பயணத்திற்காக ஊர்காவற்றுறையில் காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. (க-73)

## தாலிக்கொடி அபகரிப்பு

நெல்லியடி, ஒக். 11

இரவு வேளை வீட்டு ஜன்னலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கு உறங்கிக் கொண்டிருந்த பெண்ணின் கழுத்திலிருந்த 6 பவுண் நிறையுடைய தாலிக் கொடியை அறுத்துக்கொண்டு தலைமறைவானார்கள்.

இத் திருட்டுச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு, புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்துக்கு அருகில் இடம்பெற்றது. (க-109)

## சிறுகைத்தொழில் கடன் உதவி

நீர்வேலி, ஒக். 11

வலி. கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது கிராமிய வங்கிகளினூடாக அங்கத்தவர்களுக்கு விசேட சிறுகைத் தொழில் கடன்களை வழங்கி வருகிறது.

சுமார் 30 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படும் இக் கடனைப் பயனாளிகள் முப்பது மாதங்களில் தடவைப் பணங்களாகக் கட்டி முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-110)

# மரண அறிவித்தல்

திருமதி

## சுப்பையா தெய்வானைப்பிள்ளை

திருமதி சுப்பையா தெய்வானைப்பிள்ளை நேற்று (10-10-2001, புதன்கிழமை அதிகாலை கைதடியில் காலமாகிவிட்டார்.

இவர் தெ. மே. ப. நோ கூட்டுறவுச் சமாச முன்னாள் முகாமையாளர் வல்லிபுரம் சுப்பையா அவர்களின் துணைவியாரும், கிறிஸ்ணசாமி (சுவிஸ்). நாகரத்தினம், கிருஸ்ணமூர்த்தி (கொழும்பு), கிருஷ்ண கோபால் (சுவிஸ்), நாகேஸ்வரி, கிருஸ்ணபகவான் (கனடா), நாகலட்சுமி (கனடா), கிருஷ்ணதேவன், நாகபூபதி (கனடா), நாகபுஸ்பம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவசோதி, சிவசுப்பிரமணியம், மல்லிகாதேவி, ருக்மணி, கதிர்காமநாதன், கௌசிகி ,விஜயகுமார், யசோதா, நல்லநாதன், காலஞ்சென்ற செல்வரத்தினம் ஆகியோரின் மாமியாரும், நாகலிங்கம், சுவாமிநாதர், சின்னத்தம்பி, இராமலிங்கம், கணபதிப்பிள்ளை, வள்ளியம்மை, வேலுப்பிள்ளை, மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்லையா (கனடா), தங்கரத்தினம் (கொழும்பு) ஆகியோரது மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்நேற்று(10.10.2001) புதன்கிழமை பி. ப. 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஊரியான் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
வ. சுப்பையா.
(கணவர்)

கைதடி தெற்கு,
கைதடி. (93286)

## உதயன்

## சிறுவர்களின் உரிமைகளை மதிப்போம்!

"சிறுவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை வழங்குவதும், அவர்களுக்கு வளமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதும் அனைவரதும், தலையாய கடமையாக இருக்கவேண்டும்" -

ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவுப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் இவ்வாறு வலியுறுத்தியிருக்கின்றார். சிறுவர்தின விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக்கூறினார்.

சுயமாகச் சிந்திப்பதற்கும், தீர்மானங்களை எடுப்பதற்கும், தமது வளமான எதிர்காலத்தக்கான அடிப்படைக் கல்வியைப் பெறுவதற்கும் உரித்துடையவர்கள் சிறுவர்கள்.

எமது சமூகத்தில் பல சிறுவர்களுக்கு இந்த அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதும், அதற்கு மாறாகப் பலவந்தமாகத் தொழில் நடவடிக்கைகள், சித்திரவதைகள், துஷ்பிரயோகங்கள் போன்றவற்றுக்கு அவர்கள் உடபடுத்தப்படுவதும் வழமையாகிவிட்டது.

ஆரம்பநிலையில் கல்விவசதி பெறுவது சிறுவர்களின் அடிப்படை உரிமையாகவும், கட்டாயமானதாகவும் உள்ள போதிலும் இலங்கையில் மட்டும் நான்கு லட்சம் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் கல்வி வசதி மறுக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

நமது எதிர்காலச் சந்ததியின் வளமான வாழ்க்கையில் எமக்கு உண்மையில் அக்கறையிருக்குமானால் இதில் நாங்கள் மூன்று அடிப்படை விடயங்களை வகுத்து அதன் பிரகாரம் திட்டமிட்டுச் செயற்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஒன்று -

☆ சிறுவர்கள் அனைவருக்கும் கட்டாயக் கல்வி என்ற திட்டம் முழுதாக நடைமுறைப்படுத்தப்பட்டு, செயல்வடிவம் பெறுவதை உறுதிப்படுத்தவேண்டும்.

இரண்டு -

☆ சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் சமூகப் போக்கு மாற்றப்பட வேண்டும்.

மூன்று -

☆ சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகம், சித்திரவதை, தவறான வழிநடத்துகை போன்றவற்றில் ஈடுபடுத்தப்படாமற் தடுப்பதற்கான நடைமுறைகளை வகுத்து, அவற்றைக் கடுமையாக அமுல்செய்யவேண்டும்.

கட்டாயக் கல்வி முறையை நூறுவீதம் செயற்படுத்துவதற்கு இந்தத் திட்டத்தில் சமூகத்தின் முழு அங்கத்தவர்களும் ஈடுபாடு காட்டக்கூடிய விதத்தில் இந்த விடயத்தைப் பிரசாரப்படுத்துவது அவசியம். 'யுனிசெவ்' போன்ற அமைப்புகள் இந்த முயற்சியில் தங்களை முற்றாக ஈடுபடுத்தி, பல்வேறு பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது சமூகப் பயன்பாட்டைத் தரக்கூடியது.

பல தசாப்த காலங்களுக்கு முன்னர், பிரதேசங்கள் தோறும் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களைக் கண்டுபிடித்து, அவர்களை உரிய வேளையில் பாடசாலைக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டு செயற்பட்டு வந்தார். அவரை சாதாரணமாக 'இடாப்பு வாத்தியார்' என்று அழைப்பர். இவர் ஒரு பாடசாலைக் குரியவராக இல்லாமல், ஒரு பிரதேசத்துக்குப் பொறுப்பானவராகக் கடமையாற்றிவந்தார்.

இதே நடைமுறையை நாம் இப்போதும் பயன்படுத்தலாம். அபிவிருத்தித் தொண்டர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என்று இப்போது நியமிக்கப்பட்டு மாத வேதனம் பெறுவோரை, தேர்தலை இலக்கு வைத்து, ஊரில் வாக்காளர் பட்டியலல் பெயர் இருந்தும் அங்கு வசிக்காமல் இருப்போரின் பெயர்ப் பட்டியலைத் தயாரித்து வரும்படியான அரசியல் பணிகளுக்குப் பயன்படுத்தாமல், இந்த 'இடாப்பு வாத்தியார்' போன்றோரின் பணிகளுக்கு ஈடுபடுத்தலாம்.

நமது தாயகப் பூமியில் கட்டாயக் கல்வி உட்பட சிறுவர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் விடயத்தில் முக்கிய காரணியாக யுத்தமும் யுத்தப் பாதிப்புகளும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அதிலும் அதிக பாதிப்பு வன்னியில் உள்ள நமது சிறுவர்களுக்குத்தான்.

அங்கு பெற்றோரை இழந்து, அடிப்படைக் கல்வி வசதி மறுக்கப்பட்டு, அன்றாட ஜீவனோபாயத்துக்கே வழியின்றி அல்லலுறும் நமது பிள்ளைகள் குறித்து சர்வதேச அமைப்புகளும் எங்கள் தொண்டு நிறுவனங்களும் அதிக சிரத்தை எடுப்பது அவசியம்.

எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் என்ற - வாழ்க்கையின் அடிப்படைக் கோட்பாட்டை - நமது சமூகத்தின் சொத்துக்களான சிறுவர்கள் விடயத்திலும் சரியாகக் கடைப்பிடிப்பதை உறுதிசெய்வோம்.

## கூடிய மின்கட்டணம் அறவிடுவதாக வடமராட்சிக் கரையோர மக்கள் அதிருப்தி

வடமராட்சி,ஒக்.11

வடமராட்சி கரையோரப் பகுதியில் ஜெனரேட்டர் மூலம் வழங்கப்படும் மின்சாரத்துக்கு இலங்கை மின்சாரசபை அதிக கட்டணம் அறவிடுவதாகக் கரையோர வாசிகள் மிகுந்த கவலை தெரிவித்துள்ளனர்.

இக்கரையோரப் பகுதியில் வியாபாரிமூலை, பொலிகண்டி, தொண்டமனாறு ஆகிய இடங்களில் தலா ஒவ்வொரு ஜெனரேட்டர்கள் வைக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

இப்பகுதிகளில் சுழற்சி அடிப்படையில் இரண்டு தினங்களுக்கு ஒருமுறை தினமும் காலை 4மணிமுதல் 6.30 மணிவரையும், இரவு 6.30மணிமுதல் 10 மணிவரையுமே மின்சாரம் வழங்கப்படுகிறது. ஏனைய நேரங்களில் மின்சாரத்தைப் பெறமுடியாது.

இம் மின்விநியோகத்துக்கென ஒவ்வொரு வீடுகளிலும் மாதந்தோறும் தலா நூற்றிதொண்ணூறு ரூபாவீதம் அறவிடப்படுகிறது.

போதிய மின் விநியோகம் இல்லாத நிலையில் அதிக கட்டணத்தை இலங்கை மின்சாரசபை அறவிடு வது குறித்து மின் பாவனையாளர்கள அதிருப்தியும், கவலையும் வெளியிட்டுள்ளனர். (க-173)

## இடம்பெயர்ந்தோர் முகாம்களில் மலசலகூடங்களை சுகாதார முறைப்படி பாவிப்பது குறித்து பயிற்சி வகுப்பு

வலிகாமம் தெற்கு,ஒக்.11

துன்னாலை வடக்கு சகாயமாதா கோயிலடி இளவோலைப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாமில் உள்ள மக்களின் பாவனைக்கென ஒன்பது மலசல கூடங்கள் பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

இம் முகாம்களில் வாழும் மக்கள் சுகாதார முறைப்படி எப்படிப் பாவிக்க வேண்டும் என்பது பற்றிய பயிற்சி வகுப்பொன்று கடந்த வியாழக்கிழமை பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

துன்னாலை வடக்கு கிராம சேவையாளர் சிவராசா தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பை அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இளங்கோவும், பட்டினிக்கெதிரான திட்ட உத்தியோகத்தர் க.இராசேந்திரமும் நடத்தினர்.

சுகாதாரமும் நோய்களும், மனிதர்களின் கழிவகற்றல், பாதுகாப்பான குடிநீர், வீட்டுச் சுற்றாடல், வயிற்றோட்ட நோயும் அதனைக் கட்டுப்படுத்தலும் என்ற விடயங்கள் குறித்து இவர்களால் விளக்கம் அளிக்கப்பட்டது. சித்திர அட்டைகளும் காட்சிப் படுத்தப்பட்டன. நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இவ்வகுப்பில் கலந்துகொண்டனர்.

பயிற்சி முடிவில் சுகாதார நடைமுறைகள் பற்றிய கைந்நூல் ஒன்று பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் இலவசமாக விநியோகிக்கப்பட்டது. (க-152)

## நாட்டு நடப்பு

அஞ்சுகம் ரீச்சர் என்றால்
அசையாத துணிச்சல் காரி
நெஞ்சினில் வீரம் மேவ
நெடுவழி தனியே போவாள்
கஞ்சலன் ஒருவன் தன்னை
கவனித்து வருதல் கண்டாள்
நெஞ்சினை நிறைத்த தாலி தன்னை
நிதானமாய்க் கழற்றிவைத்து
அஞ்சுகம் அணிந்து வந்தாள்
அரைக்கிலோ 'இமிரேசன்' தாலி
கஞ்சலன் மறுநாள் பாய்ந்து
கழுத்தானை அறுத்துவிட்டான்
அஞ்சியே கடையில் விற்றான்
அறுபது ரூபாய் பெற்றான்.

- *விகடகவி.*

## ஈழத்தமிழர்களுக்கு மகோன்னத காலம் வரும் அதற்காக தமிழக சமயபீடங்கள் பிரார்த்திக்கும்

### இணுவிலில் நடந்த வைபவத்தில் தமிழக அறிஞர் உரை

வலிகாமம்,ஒக்.11

"காயத்ரி மந்திரம் புனிதமான தொன்று. அதனை ஒரு குருவின் உபதேசம் மூலமே பெறவேண்டும். உபதேசம் பெற்ற ஒருவரே காயத்ரி மந்திரத்தை ஓதவேண்டும். ஏனையவர்கள் அனைவரும் அதன் பொருளை கட்டாயம் அறிந்திருக்க வேண்டும்."

இணுவில் காயத்ரிபீடம் தர்ம சாஸ்தா குருகுலத்தில் நடைபெற்ற வார்ஷீக காயத்ரி ஜபஹோம பெருவிழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய தென் இந்திய தில்லை ஸ்தானம் சேக்கிழார் அடிப்பொடி இலக்கிய கலாநிதி பிரம்மஸ்ரீ நடராஜன் இராமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ணஐயர் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் நடராஜன் இராமச்சந்திரன் மேலும் கூறியதாவது:-

இலங்கைத் தமிழர்கள் அனுபவித்துவரும் கஷ்டங்கள் இன்னும் சிலகாலம் நீடிக்கும். அதன்பின் மகோன்னதமான ஒருநிலை ஈழத் தமிழர்களுக்குக் கிடைக்கும். விரைவில் அந்நிலையை அடைய தமிழகத்து அனைத்துச் சமயபீடங்களும் பிரார்த்தனைகள் மேற்கொள்ளும்.

"வேதம் சிறந்திருந்தால் நாடு சுபீட்சம் அடையும். வேதம், ஆகமம் இரண்டும் நம் இருகண்கள். வேதத்தின் அடிப்படையில்தான் நம் மதம் வளர்கின்றது. யாழ்ப்பாணத்தில் வேதநம் சிறந்த முறையில் பேணப்படுவதைவிட்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றேன்" - என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள் உரையாற்றுகையில் -

தாம் பெற்ற கல்வியை அந்தணர்களுக்கு வழங்கி, எப்படியெல்லாம் அவர்கள் வாழ வேண்டும் என்பதை மகாதேவக் குருக்கள் தமது வாழ்க்கை முறையாகவும் செயல் முறையாகவும் வெளிப்படுத்தி வருகிறார். அந்தணர்கள் வழிநெறிமுறை வழுவாது வாழ வேண்டும். வளரும் தலைமுறை சீரிய வழியில் வளர்க்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி இவ்விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது எனக் கூறினார்.

கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

சமயத்தைப் பற்றிய பல்வேறு விமர்சனங்கள் வெளிவந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் சிவாசாரியர்கள் அவற்றுக்குப் பதில் சொல்லக்கூடிய வகையில் தமது அறிவையும், ஆற்றலையும், ஆளுமையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். குருபாரம்பரியம் வளரும் தலைமுறைக்கு வழங்கப்படவேண்டும் என்ற நோக்குடன் மகாதேவக் குருக்கள் இதுபோன்ற ஏற்பாடுகளை நடத்திவருகின்றார். காயத்ரி ஜபம் மூலம் ஆத்மபலமும் மனப்பக்குவமும் நமக்கு ஏற்பட்டு சமுதாயத்துக்கு நற்சேவையாற்ற முடியும்.

இந்திய குருத்துவத்தை யாழ்ப்பாணத்து குருத்துவத்துடன் இணைத்து - ஆத்மீக சிந்தனைகளை நெறிப்படுத்தி - காஞ்சி காமகோடி பீடத்துடன் காயத்ரிபீடம் இணைந்து செயற்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது என அவர் மேலும் தெரிவித்தார்.

காலை ஏழு மணி தொடக்கம் நடைபெற்ற காயத்ரி ஜபம், ஹோமம், தர்ப்பண நிகழ்வுகளில் ஏராளமான அந்தணர்கள் கலந்துகொண்டனர்.

பிரம்மஸ்ரீ தி.கங்காதரக் குருக்கள், பிரம்மஸ்ரீ சோ.வாகீஸ்வரக் குருக்கள், பிரம்மஸ்ரீ செ.ரவீந்திரக் குருக்கள் ஆகியோர் காயத்ரிபீடம் சார்பில் "சிவாகம கிரியா தத்வநிதி" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பிரம்மஸ்ரீ சுந்தரமூர்த்திக் குருக்கள், பிரம்மஸ்ரீ சிவராயசர்மா ஆகியோரும் உரையாற்றினர். பிரம்மஸ்ரீ து.மகாதேவக் குருக்கள் நன்றி கூறினார். (க-152)

## வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களின் தொகையான கழிவுப் பொருள்களை அகற்ற முன் அனுமதி பெற வேண்டும்

### பருத்தித்துறை நகரசபை அறிவிப்பு

வடமராட்சி,ஒக்.11

வீடுகள், வர்த்தக நிலையங்கள், தேநீர்க் கடைகள் போன்றவற்றில் ஏற்படும் அன்றாடக் கழிவுப் பொருள்கள் தவிர ஏனைய பெரும் கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கு நகர சபையிடம் முன் அனுமதி பெற வேண்டும் என பருத்தித்துறை நகர சபை வரியிறுப்பாளர்களுக்குத் தெரிவித்துள்ளது.

அன்றாடக் கழிவுப்பொருள்களை பருத்தித்துறை நகரசபை சுகாதாரத் தொழிலாளர்கள் மூலம் உடனுக்குடன் அப்புறப்படுத்தும் சேவையை மேற்கொண்டு வருகிறது.

ஆனால் வீடுகள், வர்த்தக நிலையங்கள், தேநீர்க்கடைகளின் அதிகமான கழிவுப் பொருள்களை வரியிறுப்பாளர்கள் வெளியே கொட்டாது சேமித்து வைத்து நகரசபை அலுவலகத்தில் முன் அனுமதி பெற்றால் மட்டுமே அவை அப்புறப்படுத்த முடியும் என நகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறான கழிவுப்பொருள்களை நகரசபை அப்புறப்படுத்துவதற்கு விசேட கட்டணம் அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும் தொகையான கழிவுப் பொருள்களை அன்றாடக் கழிவுப் பொருள்களுடன் வீதிக்கரையோரங்களில் குவிப்போர்மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பருத்தித்துறை நகரசபை வரியிறுப்பாளர்களுக்கு அறிவித்துள்ளது. (க-173)

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

2001ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐந்தாம் தரத்துக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்காக கீழ்க்காணும் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையின் பெயர், பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை, சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் புலமைப் பரிசில் கொடுப்பனவுக்குத் தகுதியுடைய மாணவர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்களை உடனடியாக யாழ்கல்வி வலயத்தின் திட்டமிடல் பகுதிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10-ந்)

## நாளை

புரட்டாதி 26
வெள்ளிக்கிழமை
திதி : தசமி
பிற்பகல் 1.14 வரை
நட்சத்திரம் : ஆயிலியம்
முன்னிரவு 10.00 வரை
மரணயோகம்
சுபநேரம் : 6.02 - 7.32
ராதுகாலம் : 10.32 - 12.02
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

சிக்கனமாய் இரு; ஆனால்
கருமியாய் இராதே!
இரக்கம் காட்டு, ஆனால்
ஏமாறிப் போகாதே!

## நல்லூரில் இன்று இடம்பெயர்சேவை

நல்லூர் பிரதேச செயலக இடம்பெயர் சேவை இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலைய மண்டபத்தில் பிரதேச செயலாளர் நாகேந்திரய்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பல திணைக்களங்களும் இந்நடமாடும் சேவையில் பங்குபற்றவுள்ளமையால் ஜே/91, ஜே/94, ஜே/95, ஜே/106, ஜே/107, ஜே/108, ஜே/109, ஜே/112, ஜே/113 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இதில் கலந்துகொண்டு தமது பிரச்சினைகளை நேரில் தீர்த்துக் கொள்ளமுடியும் என அலுவலக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (க-86)


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

மிதிவெடிகளும் யுத்த வெடிபொருள்களும்
எமது சமூகத்தை ஊனப்படுத்துகின்றன...
இதைத் தடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து
ஊக்கமுடன் செயற்படுவோம்!



# பொருள்களை மீளப்பெறலாம்

கப்பல் மூலம் திருகோணமலை சென்ற பயணிகளால் எடுத்துச் செல்ல பட்டு, சோதனைகளின் போது படையினரால் தடுக்கப்பட்ட பொருள்கள் தற்போது மணியம் கட்டடத்தில் உள்ள 'றான்' அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அப்பொருள்களின உரிமையாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் நேரில்வந்து அடையாளங்காட்டி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று 'றான்' அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஒ-10)


## சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

## கிளைக்குழுத் தேர்தல்

## 2001-10-20

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் எதிர்வரும் (2001-10-20) சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெறும். தற்போது செயற்பட்டு வரும் கைதடிச் சந்தி 188, கைதடி மேற்கு 189, கைதடி நுணாவில் 191ஆம கிளைகளுக்கான தேர்தல் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும், கைதடி வடக்கு 190, கைதடி மத்தி 204ஆம் கிளைகளுக்கான தேர்தல் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்திலும், ஏனைய கிளைகளுக்கான தேர்தல் அச்சுவேலி மத்திய கல்லூரியிலும் நடைபெறும். கிளைக்குழுத் தெரிவின்போது தகுதியுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பங்கு பெறும் சகல அங்கத்தவர்களுக்கும் விசேட படி ரூபா நூறு (ரூபா 100/-) வழங்கப்படும்.


நா.சின்னத்துரை
உபதலைவர்.

(C-18615)

க.மோகனதாஸ்
செயலாளர்.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 10 ✱ 02 ✱ 1934



இறப்பு 04 ✱ 10 ✱ 1999

### அமரர் முருகேசு கந்தையா

திதி:11.10.2001 தசமி

ஆண்டுகள் இரண்டு மறைந்த போதும்
உங்கள் நினைவுகளை என்றும் மறக்க முடியாது
நாம் தவிக்கின்றோம்!

உங்களதுஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

*ஏழாலை மேற்கு, நாக்கியம் புலம், சுன்னாகம்.* (92880)

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 1937 ★ 03 ★ 24



விண்ணில் 2001 ★ 09 ★ 13

### அமரர் தவசி பிள்ளையார்

அன்பு ஐயா!

நீங்கள் மறைந்து சென்றது
முப்பத்தொரு நாளாகியென்ன
மூவாயிரம் ஜென்மம் எடுத்தாலும்
உம் மறைவு எம்மை விட்டு
ஒரு போதும் மறையாது!

இன்று (11-10-2001) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*173/1. முதலாம் ஒழுங்கை, அரசடி, நல்லூர்.* (93228)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

## செயலமர்வு

தென்மராட்சி,ஒக்.11

தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான "மகிழச்சிகரமான கற்றல்" செயலமர்வு எதிர்வரும் சனிக்கிழமை வடமராட்சி, வலிகாமம் பிரதேசங்களிலுள்ள நிலையங்களில் நடைபெறும்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தாங்கள் முன்னர் செயலமர்வில் கலந்து கொண்ட நிலையங்களுக்குச் சமுகமளித்து செயலமர்வில் பங்குகொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார். (க)

## பளை மாணவர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.11

பளை மத்திய கல்லூரியில் இருந்து தேசிய அடையாள அட்டை மற்றும் விசேட அடையாள அட்டை என்பவற்றுக்கு விண்ணப்பித்த மாணவர்களின் ஒரு தொகுதி அடையாள அட்டைகள் பாடசாலைக்குக் கிடைத்துள்ளன.

உரிய மாணவர்களை பாடசாலை நாள்களில் நேரில்வந்து பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் கே.குணபால சிங்கம் அறிவித்துள்ளார். (க-10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.11

இராமநாதன் நுண்கலைத் துறை 4ஆம் வருட மாணவர்களுக்கு நடைபெறவிருக்கும் பிரிவுபசார வைபவம் சம்பந்தமான கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு இராமநாதன் நுண்கலைத்துறை அறிமுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் 3ஆம், 4ஆம் ஆண்டு மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகந் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.(க-ரி)

## ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம்,ஒக்.11

பிரமாண அடிப்படையிலான மூலதன வேலைத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள 16 உள்ளூராட்சி சபைகளுக்கும் இந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட 85 லட்சம் ரூபா நிதியில் இதுவரையும் 52 லட்சம் ரூபாவே யாழ்பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணத்திலிருந்து 16 உள்ளூராட்சிச் சபைகளிலும் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் யாவும் பூர்த்தியடையும் நிலையிலுள்ளதாகவும் -

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து மிகுதிப் பணமான 33 லட்சம் ரூபாவைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-10)

## இரவு நேர ஷெல் வீச்சால் மக்கள் பீதி

மட்டக்களப்பு,ஒக்.11

மட்டக்களப்பு மாவட்டத்தில் அம்பிலாந்துறை, அரசடித்தீவு, பழுகாமம் ஆகிய கிராமங்களை நோக்கி கடந்த சில தினங்களாக இரவு நேரங்களில் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல்களால் பீதியடைந்த அப்பகுதி மக்கள் இரவு வேளைகளில பாதுகாப்பான இடங்களில் தங்குவதாகக் கூறப்படுகிறது.

குருக்கள்மடம், செட்டிபாளையம் ஆகிய அதிரடிப்படை முகாங்களில் இருந்தே இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டது. (ஐ-3)

## அரச ஆதரவாளர்கள் இருவர் படுகொலை

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தீவிர ஆதரவாளர்கள் இருவர் புத்தளம் மாவட்டத்தில் திங்கட்கிழமை இரவு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்ட எம்.பி., டி.எம். தஸநாயக்கவின் நெருங்கிய சகாக்களான இந்த இருவரும் இனந் தெரியாத ஆயுதக் கும்பல் ஒன்றினாலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட இவ்விருவரும் அப்பகுதியைச் சேர்ந்த ஷாமி, திஸா என அடையாளம் காணப்பட்டனர். இவ்விருவரினதும் படுகொலைகள் தொடர்பான விசாரணைகளை பொலீஸார் ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன்

### செல்வன் அழகர்சாமி விசாகன்

5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 141 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இவரையும் இவரின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அதிபர், ஆசிரியர்கள், பெற்றோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*தமிழ்ப்பூங்கா அச்சகம், நெல்லியடி.* (93275)

சித்தப்பா, சித்தி, யம்பு அக்கா, தீசன் அண்ணா.


## கொக்குவில் இந்துக் கல்லூரி தரம் 6 அனுமதி - 2002

2001ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் எமது கல்லூரியில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று 30.10.2001 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(C-18626) - அதிபர்.


## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன அழைப்பும்

தோற்றம் 11 - 05 - 1959



மறைவு 14 - 06 - 2001

### கந்தையா ஸ்ரீவள்ளிநாயகி

(பாமா/வள்ளி)

*(எழுதுவினைஞர், ஓய்வூதியக் கிளை - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)*

அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்களின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் நாளை (12.10.2001) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அனைவரும் வருகைதந்து பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சிவன் கோயிலடி, புத்தூர் மேற்கு, புத்தூர்.* (93253)

வருகையை நாடும்:
தாயாரும், சகோதரர்களும்.

## நெஞ்சுருகும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் அரவணைப்பில் 26 ☆ 11 ☆ 1968



ஆண்டவனின் அரவணைப்பில் 12 ☆ 09 ☆ 2001

### திருமதி இந்துமதி தவேந்திரன் (B.Com.)

*(ஆசிரியை, யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி - புத்தூர்)*

எமக்கெல்லாம் துணையாக இருந்தாயம்மா!
வையகவாழ்வுதனில் தடைகளைத் தகர்த்தெறிந்தாய்
தடம் போட்டுத் தலைநிமிர்ந்து வாழ்ந்தாயம்மா!
கொடும்வியாதியாய் கூற்றுவனோடு களமாடினாய்
முடியவில்லை இவ்வுலக வாழ்வை விட்டகன்றாயம்மா!
சுமக்கின்றோம் உன் பிரிவால் சோகங்களை
துதிக்கின்றோம் உன்னாத்மா சாந்தி பெறுக.

அமரர், காலனின் கரங்களில் சிக்குண்ட செய்தி கேட்டு நாம் துயரில் துவண்டு கொண்ட போது ஓடோடி வந்து உற்றதுணை நின்று எம்மை அரவணைத்து ஆறுதலளித்தவர்களுக்கும், பல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் வழங்கிய உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதலளிக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அத்துடன் இன்று (11.10.2001) வியாழக்கிழமை எமதில்லத்தில்நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தி.தவேந்திரன் (கணவர்)
*(பாதுகாப்பு உத்தியோகஸ்தர், யாழ். பல்கலைக்கழகம்)*

*பெரியவளவு, புலோலி தெற்கு, புலோலி.* (93242)

# நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும்

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்நகரப் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கவும் வீதி ஒழுங்கைப் பேணவும் யாழ்.மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாநாகரசபை உறுப்பினர் முத்துக்குமாரு தவநாதன் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மாநகர முதல்வருக்கும் ஆணையாளருக்கும் அவர் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு கேட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கே.கே.எஸ். வீதி, ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி போன்ற விஸ்தீரணம் குறைந்த வீதிகளில் வியாபார ஸ்தாபனங்களே அதிகம் உள்ளதால், பொருள்களை ஏற்றியிறக்கும் பணியில் பாரவூர்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

அத்துடன் பாதுகாப்புப் படையினரின் கனரக வாகனங்களும் ஆங்காங்கே தரித்து நிறுத்தப்படுகின்றன.

இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே இது விடயத்தில் மாநகரசபை பொதுமக்களின் நலன்களைப் பிரதானமாகக் கருத்திற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதற்கு அனைத்துத் தரப்பினரும் தமது ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம் - என உள்ளது. (ஐ-3)



சனிக்கிழமைகளில் வங்கிச் சேவையை ஆரம்பிக்கும் முதல் நாள் வைபவம் இலங்கை வங்கியின் யாழ்.மேற்றரக் கிளையில் கடந்த சனிக்கிழமை வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திருமதி க.துரைராஜா தலைமையில் நடைபெற்றது.

வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் சி.விக்னராஜா மங்கள விளக்கு ஏற்றுவதை முதற் படத்தில் காணலாம்.

உதவிப் பொதுமுகாமையாளர் திருமதி க.துரைராஜா உரையாற்றுவதை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

இந்த வைபவத்தில் வங்கி வாடிக்கையாளர்கள், பணியாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# வீதியில் சென்றோரைத் தாக்கி நகைகளை அபகரித்த கும்பல்

## சோனப்பு மயானப் பகுதியில் சம்பவம்

நெல்லியடி,ஒக்.11

இரவுவேளை சைக்கிளில் சென்ற இரு பெண்கள் உட்பட மூவரை வழிமறித்த இனந்தெரியாத நபர்கள், அவர்களை இரும்புக் கம்பியால் தாக்கிவிட்டு, பெறுமதியான நகைகளையும் பணத்தையும் அபகரித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளனர். காயமடைந்த மூவரும் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்துணிகரக் கொள்ளைச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணியளவில், கரவெட்டி சோனப்பு மயானத்துக்கு அருகில் இடம்பெற்றது.

மீசாலை கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து கரணவாய் தெற்கில் வசித்துவருபவர்களான, சின்னையா அருளானந்தசிவம் (வயது 48) இவரது மனைவி அ.பத்மாதேவி (வயது 40), சங்கரப்பிள்ளை செல்வதேவி (வயது 25) ஆகியோரே திருடர்களினால் தாக்கப்பட்டு கன்னம், காது, கை, கால் பகுதிகளில் காயமடைந்துள்ளனர்.

இவர்களிடமிருந்து சங்கிலி, காப்பு, மோதிரம், தோடு, பணம் உட்பட சுமார் 35ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள் அபகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக, நெல்லியடி பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வடமராட்சிப் பகுதியில் அண்மைக்காலமாக இவ்விதமான வழிப்பறிகள், திருட்டுக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதனால் மக்கள் பெரும் அச்சம் அடைந்துள்ளனர். (ஐ-109)

# விவசாயப் பயிற்சி நிலையத்தில் புதிய மூன்று பயிற்சி நெறிகள்

யாழ்.மாவட்ட விவசாயிகளின் நன்மைகருதி திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் புதிதாக மூன்று பயிற்சி நெறிகள் நடைபெறவுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை தேனீ வளர்ப்புத் தொடர்பான பயிற்சி நெறியும் -

எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை நெற்செய்கையில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறியும்-

எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை மிளகாய், மரக்கறிப்பயிர் மற்றும் நாற்று மேடைப் பராமரிப்பு ஆகியன தொடர்பான பயிற்சி நெறியும் இடம்பெறவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புக்கள் யாவும் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. பயிற்சிபெற விரும்புவோர் தமது பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடம் பதிவுகளை மேற்கொண்டு பயிற்சி நெறியில் கலந்துகொள்ளலாம் என்று மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை அறிவித்துள்ளார். (ம-10)

# பருத்தித்துறைக் கடலில் சில பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு மீண்டும் தடை!

தென்மராட்சி,ஒக்.11

பருத்தித்துறைத் துறைமுகம் மேற்குப் புறப்பகுதிகளான எரிஞ்ச அம்மன் கோயிலடி, சுப்பர்மடம், சக்கோட்டை, வியாபாரிமூலை, இன்பருட்டி ஆகிய கடற்பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு கடந்த சனிக்கிழமை தொடக்கம் படையினரால் மீண்டும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இக்கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. பின்னர் கடந்த 29ஆம் திகதி தொடக்கம் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டது. தற்போது மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் பருத்தித்துறை துறைமுகத்தின் கிழக்குப் பகுதியில் தொடர்ந்து மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## சந்நிதியான் வாராந்த நிகழ்வில் இன்னிசை

யாழ்ப்பாணம்,ஒக்.11

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் இவ்வார நிகழ்வாக - நாளை குணராஜா நக்கீரனின் இன்னிசை நிகழ்வு இடம்பெறும். அறிமுகவுரையை செல்லப்பா நடராஜா நிகழ்த்துவார். (க)

## வலி. கிழக்குப் பகுதியில்

# இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள முகாம்களுக்கு நிதியுதவி

நெல்லியடி,ஒக்.11

வலி.கிழக்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இரு இடங்களில் அமைந்துள்ள நலனோம்பு நிலைய அபிவிருத்திக்கென, வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் 21 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

வலிகாமம் வடக்கிலிருந்து, கடந்த 1991 ஆம் வருடம் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மக்களில், 46 குடும்பங்கள் கோப்பாய் கிருஷ்ணா கோயிலடி நலநோன்பு நிலையத்திலும், மேலும் 28 குடும்பங்கள் கோப்பாய் செல்வபுரம் நலநோன்பு நிலையத்திலும் வசித்து வருகின்றன. அண்மையில் , இந்த நலனோன்பு நிலையங்களில் உள்ள குறைபாடுகளைப் பார்வையிடுவதற்காக வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் அங்கு விஜயம் செய்து மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்திருந்தார்.

இதனையடுத்தே கிருஷ்ணர் கோயிலடி நலனோன்பு நிலையத்துக்கென கூரைத்தகடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிதாகக் குழாய்க்கிணறும், எட்டு மலசல கூடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை -

செல்வபுரம் நலனோன்பு நிலையத்திலும், குழாய்க்கிணறும், நான்கு மலசல கூடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த இரு நலனோன்பு நிலையங்களிலும் உள்ள சிறார்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, கிருஷ்ணர் கோயிலுக்கு எதிர்ப்புறமாக தற்காலிகமாக ஒரு பாலர் பாடசாலை அமைப்பதற்கு காணி தெரிவு செய்யப்பட்டு கட்டட வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் என வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் தெரிவித்தார். (ஐ-109)

## பொலீஸார் என்று தம்மைக் கூறிக்கொண்டு

# பயணிகளிடம் கொள்ளையிட்டு வந்த இருவர் இரத்மலானையில் கைது!

கொழும்பு,ஒக்.11

யாழ்ப்பாணத்தில் இருந்து விமானம் மூலம் இரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கும் பயணிகளை அச்சுறுத்தி நீண்டகாலமாகப் பல்வேறு கொள்ளைகளில் ஈடுபட்டு வந்த இருவரைக் கல்கிசை பொலீஸ் நிலைய பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.


யாழ்ப்பாணத்தில் இருந்துவரும் பயணிகளை இடைமறித்து தம்மைப் பொலீஸார் எனக்கூறி இவர்கள் இருவரும் கொள்ளைகளில் ஈடுபட்டு வந்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் பயணிகளிடம் இருந்து நகை மற்றும் பணத்தை அபகரித்த பின்னர் அவர்களிடமிருந்து அடையாள அட்டைகளையும் பறித்துக் கொண்டு செல்வதாக ஆரம்பக்கட்ட விசாரணைகள்மூலம் தெரியவந்துள்ளது.

பிலியந்தல்லையைச் சேர்ந்த சுனில என்பவரும் மொறட்டுவவைச் சேர்ந்த முதியான்சலாகே கமகே என்பவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இராணுவத்தில் இருந்து தப்பி வந்த ஒருவரே இந்தக் கொள்ளைக் கோஷ்டியின் தலைவராகச் செயற்பட்டு வந்துள்ளார். இவர் உட்பட மேலும் நால்வரை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தேடி வருகின்றனர். (ஐ)

# சாயி சிந்தனை



## அனைத்து உயிரினங்களிலும் உள்ளுறைவது ஒரே ஆத்மாவே!

இயந்திரம், மந்திரம், தந்திரம் எல்லாமே மனிதனுள் உறைபவையே! 'ஸோஹம்' என்ற மந்திரத்தை (சுவாசிக்கும் பொழுது) 21,600 முறை ஒரு நாளில் நாம் திரும்பத்திரும்பச் சொல்கின்றோம். 'ஸோஹம்' என்றால் 'நான் கடவுள்' இதைவிடச் சிறந்த மந்திரம் எதுவுமில்லை.

மனித உடல் ஓர் இயந்திரம். இதனுள் இருக்கும் இதயத் துடிப்புக்கு யார் காரணம்? உணவு ஜீரணமாவதற்கும் இரத்தம் சீராக ஓடுவதற்கும் யார் பொறுப்பு?

ஓர் அங்குல அளவே உள்ள சின்னஞ்சிறு கண்களால் பல லட்சக் கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள வானத்து தாரகைகளையும் காணமுடிகிறதே? அது எவரால்? சின்னஞ்சிறிய காதுப்பாறை தொலைதூர ஒலிகளையும் ஈர்த்துக் கேட்கிறதே, அது எப்படி?

உன்னுள்ளேயே ரெலிவிஷனும் இருக்கிறது; ரெலிபோனும் இருக்கிறது. அத்தகையதொரு சக்திவாய்ந்த இயந்திரம் நம் தேகம். அதனுள் இடைவிடாது இயங்கும் மந்திரம். ஸோஹம் - அப்படியிருந்தும் நமது பந்த விடுதலைக்காக நாம் உழைக்காமல் இருப்பது வெட்கப்படவேண்டிய விடயம். ஷ்ருதயம்தான் தந்திரம் - ஸோகம் தான் மந்திரம் - தேகம் தான் யந்திரம். இவை மூன்றும் அகத்தினுள் இருப்பினும் மனிதன் இன்னும் அவற்றை வெளியேதான் தேடுகிறான்.

இறைவன் ஒருவனே; இரண்டல்ல. அனைத்து பல்புகளிலும் ஒரே மின்சாரமே ஒளிர்வதைப் போல, அனைத்து உயிரினங்களிலும் ஒரே ஆத்மாதான் உள்ளுறைகிறது.

நாடுகள் அனேகம், ஆனால் மண்மட்டும் ஒன்றுதான்! உயிரினங்கள் எத்தனையோ, இருப்பினும் மூச்சுமட்டும் ஒன்றுதான். நட்சத்திரங்கள் அனேகம் இருப்பினும் வானம் மட்டும் ஒன்றுதான்! நகைகள் அனேகம் இருப்பினும் தங்கம் மட்டும் ஒன்றுதான்.

இவ்வாறாக ஆதார சத்யத்தைப் புரிந்துகொண்டுவிட்டால் உன்னால் தெய்வீக தத்துவத்தைப் புரிந்துகொள்ளமுடியும். நீ யாரையும் வெறுக்கக்கூடாது! உனது கோபத்தை நீயே வெறுத்து ஒதுக்கு! யாரிடமும் சண்டை போடாதே! உன்தீய குணங்களை விட்டுவிடு!

இதெல்லாம் சாத்தியமா? என்றால் இறைவனிடம் முழுமையாக சரணடையும் போது, அனைத்தும் சாத்தியமாகிறது.

*(சனாதனசாரதி 1998 மார்கழி)*

# பாடசாலைகளில் தானியங்கள் பயிரிடுவதற்கு ஊக்குவிப்பு

## மாணவர்களுக்கு விதைகள் வழங்க ஏற்பாடு

வலிகாமம் தெற்கு,ஒக்.11

மானாவாரியாக காலபோகத்தில் சோளம், அவரை, கௌப்பி போன்ற பயிர்களைச் செய்கை பண்ணுவதற்கான ஊக்குவிப்பாக மேற்படி விதை தானியங்கள் உடுவில் கமநல சேந்திர நிலைய விவசாய போதனாசிரியரால் வழங்கப்படவுள்ளன.

குறிப்பாக மாணவர்கள் தமது வீடுகளில் இவற்றைப் பயிரிடவும், விவசாயத்தில் அக்கறையுடையவர்கள் தமது நிலையங்களில் பயிரிடவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

பாடசாலைகளிலும் பாடசாலைத் தோட்டங்களில் இவற்றைப் பயிரிட ஊக்கமளிக்கப்படும்.

இது தொடர்பான பயிற்சி வகுப்பு ஒன்று எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 10 மணிக்கு உடுவில் கமநல சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நடுகை மேற்கொள்ளக்கூடியதாக தரையை பண்படுத்திக்கொள்ளுமாறும், விதை பொருளகளாக சோளம் (டுவான்), கௌப்பி (வாரணி, வியபடவன), பயறு என்பன வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய போதனாசிரியர் தெரிவித்துள்ளார். (க-152)

## உலக உளநல நாள் - ஒக்ரோபர் 10

### 2001ஆம் ஆண்டின் கருப்பொருள்

*'வேலைப்பளுவும் உளநலனும்'*

எனவே தொழிலாளரது உளநலத்தை மேம்படுத்தும் நடை முறைகள் ஒவ்வொரு தொழில்புரியும் இடத்திலும் அமைதல் வேண்டும். இதற்குச் சிறந்த ஒழுங்கமைப்பு ஒவ்வொரு திணைக்களத்திலும் இருத்தல் அவசியம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 250 தகரக் கதிரைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா.அப்புலிங்கம், 75/17, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.(93201)

WASHING MACHINE (NATIONAL), ORGAN CTK - 100, TECHNICS CD SET மற்றும் புதிய வேம்பு அலுமாரி என்பன உடன் விற்பனைக்கு உண்டு. R.கண்ணன், 73, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். T.P.2782.(93277)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்லின அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.தவராசா, (சம்பண்ணை) ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதி, நவாலி. (93254)

## புறொயிலர் குஞ்சுகள்

பிறிமா கிறீன்வலி புறொயிலர் குஞ்சுகள் விலை 43/=. 25 நாள் வளர்ந்த பிறிமா சிவப்புப் பேட்டுக்குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வை. சிவகுமார், இல.461, நாவலர் வீதி, அத்தியடி, 'கிளின் சொட்' பின்புறம், யாழ்.பஸ் நிலையம். (93276)

## கொம்பியூட்டர் பிரத்தியேக வகுப்புகள்

அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொழில்வாய்ப்புத் தேடுவோர்களுக்கு ஏற்ற முறையில் தனித் தனியாகக் கணனி கற்பிக்கப்படும் தனியே கொம்பியூட்டர் ரைப் செற்றிங் பழக விரும்புபவர்களும் வரலாம். கடிதத் தொடர்பு: A.ராகவன், 3ஆம் கட்டை, கல்வியங்காடு. (93198)

## பொருளியல்

க.பொ.த. உயர்தரப் பரீட்சை 2000, 2001 வினாவிடைகள், வெளிவாரி விளைவுகள், பேரினப் பொருளாதாரம், பணம், சர்வதேச வர்த்தகம்-வர்த்தக மாற்றுவீதம், நாணய மாற்றுவீதம், நடைமுறை விடயங்கள் ஆகிய நூல்கள் விற்பனையாகின்றன. ஆசிரியர்: வே.கருணாகரன். (93224)

## ஆங்கில வகுப்புகள்

ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரினால் 2001 (சா.த.) ஆங்கிலப் பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் மிகவும் இலகுவாகவும் துரிதமாகவும் கற்பிக்கப்படுகிறது. (பழைய கேள்வித் தாள்களும், மாதிரி வினாக்களும், விடைகளும்). தொடர்பு: 33, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (93274)

## தவறிவிட்டது

ஆழியவளை, மருதங்கேணியைச் சேர்ந்த பொன்னையா யோகராசா என்பவரது தேசிய அ.அட்டை, விசேட அ.அட்டை என்பன கடந்த 05.10.2001 அன்று மந்திகைக்கும் பருத்தித்துறைக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வடமராட்சி சிற்றூர்திச் சங்கத்தில் ஒப்படைத்துதவவும். (C/18616)

கவுந்தில், கரவெட்டி கிழக்கு எனும் முகவரியைச் சேர்ந்த மேகலா சச்சிதானந்தசிவம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை கோவிற சந்தைக்கும் சாமியன் அரசடிக்கும் இடையிலுள்ள வீதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மொடேண் ஸ்ரோர்ஸ், நெல்லியடியில் ஒப்படைத்துதவவும் (93287)

## கைமாறிவிட்டது

9ஆம் வட்டாரம், நெடுந்தீவைச் சேர்ந்த ப.பிலோமினம்மா என்பவர் கடந்த 17.09.2001இல் லங்கா முடித்த கப்பல் சேவையில் பயணித்தபோது அவரது பொதி கைமாறிவிட்டது. அதை மாறி எடுத்துச் சென்றவர்கள் தயவுசெய்து மேற்படி விலாசத்திற்கு அறியத்தரவும். (இப்பொதிக்குள் வேளாங்கண்ணி மாதாவுடைய படம், புகைப்படங்கள், கடிதங்கள் உண்டு.) (93459)

## ஒத்திவைப்பு

எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவிருந்த யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் வருடாந்தப் பரீட்சைகள் யாவும் நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் இயக்குநர் ரி.இராஜரட்ணம் அறிவித்துள்ளார். (க-10)

---

## மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



யாழ்.பல்கலைக்கழகத்தின் 20ஆவது பட்டமளிப்பு விழாவில் "முதுகலைமாணி"ப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட

அளவையூர்

**அருட்கவி சீனியர் விநாசித்தம்பி ஐயா**

அவர்களை மனமாரப் பாராட்டுவதோடு, அவரின் அருளாசி மேன்மேலும் இந்த மண்ணுக்குக் கிடைக்கவேண்டுமென எல்லாம்வல்ல ஸ்ரீநாகவரத நாராயணனைப் பிரார்த்திக்கின்றோம்.

*புகையிரத வீதி,*
*காளிகோவிலடி, கோண்டாவில்.*

நாதசுர வித்துவான்: V.K.கானமூர்த்தி குடும்பத்தினர்.

(93280)

---

## சேவை நலன் பாராட்டுவிழா



யா/வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் அதிபர்

**திரு.செ.யோகச்சந்திரன் S.L.P.S. - 1 அவர்கள்**

தமது சேவையில் இருந்து 2001.10.12ஆம் திகதி ஓய்வுபெற்றுச் செல்கிறார்.

- ※ சிதம்பரக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்
- ※ 20 வருடங்கள் ஆசிரியராகவும், 18 வருடங்கள் அதிபராகவும் 38 ஆண்டுகள் யாழ்ப்பாணம், வன்னி, மலையகம் போன்ற இடங்களில் கல்விப் பணியாற்றியவர்.
- ※ சிதம்பரக் கல்லூரியில் 7 ஆண்டுகள் ஆசிரியராகவும் 6 ஆண்டுகள் அதிபராகவும் கடமை புரிந்தவர்.
- ※ மிகச் சிறந்த விளையாட்டு வீரர், சாரணியத்துறையிலும் மிகுந்த ஈடுபாடு காட்டியவர்.
- ※ பாடசாலையின் வளர்ச்சியிலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், ஆசிரியர்கள், மாணவர்களின் ஒத்துழைப்புடன் தன்னலமற்ற சேவையாற்றியவர்.

இவர் தமது சேவையில் இருந்து ஓய்வுபெறுவது உண்மையில் இக்கல்லூரிக்கும், வல்வெட்டித்துறை மக்களுக்கும் பேரிழப்பாகும்.

பாடசாலைச் சமூகத்தை அரவணைத்து ஒரு குடும்பம் போல பாடசாலை நிர்வாகத்தை முன்னெடுத்துச் சென்ற இவரது திறமையை நாம் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

ஆங்கிலத்துறையில் நன்கு தேர்ச்சி பெற்ற இவர், மாணவர்களுக்கேற்ற ஆசானாய், ஆசான்களுக்கேற்ற நல்ல தலைவனாய் சேவைகளாற்றி, சிதம்பரக் கல்லூரியின் மாணவனாய்த் திகழ்ந்து, சிதம்பரக் கல்லூரியின் அதிபராய் தன் சேவையை முடித்துச் செல்லும் முதல்வரின் கல்விச் சேவை வல்வெட்டித்துறை மக்களுக்கு மேன்மேலும் தொடர வேண்டும் எனவும், அவர் இறையாசியுடன் நீடித்த ஆயுளும், வளமான சந்ததியும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழவேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்துப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

குறிப்பு: நாளை (2001.10.12) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபரின் சேவை நலன் பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

*இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

யா/சிதம்பரக் கல்லூரி,
*வல்வெட்டித்துறை.*

- பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
உப அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.

(93278)

---

## வாழ்த்துகின்றோம்



*யா/சங்குவேலி அ.த.க.பாடசாலையைச்* சேர்ந்த

**ஜெயபாலன் - கமலவாணி**

தம்பதியினரின் புதல்வி

**செல்வி ஜெ.டுவாரகா**

அவர்கள் 2001 - 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 135 புள்ளிகளைப் பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் நெறிப்படுத்தி ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்கள், ரியூசன் ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**பெற்றோர், நலன்விரும்பிகள்.**

(93281)

---

## WANTED SRI LANKAN AMBASSADORS

### *FOR ROTARY GOODWILL EXCHANGE*

### TO BRAZIL

**RI DISTRICT 4680 - PORTO ALEGRE**

**23RD APRIL TO 23 RD MAY 2002.**

Applications are being invited from outstanding young professionals and businessmen for the selection of team members for the **Group Study Exchange** from Rotary District 3220, Sri Lanka to Rotary District 4680 Porto Alegre Brazil.

Applicants shall be of **either sex** within the age group of **25-40 Years** and should have been in continuous employment for **two years** in a recognised business or profession.

Applications should be forwarded to the Rotary Club of Jaffna to reach the undersigned at **12, Sivagurunathar Lane, Jaffna** on or before **21st October 2001.**

*'Mankind is our Business'*

C.N.Vithyatharan
President.
Rotary Club of Jaffna.
e-mail: editorial@uthayan.com.

Dr.S.T.B.Rajeswaran
Director - Vocational Service.

(C/18638)

---

## SAMPANTHAR HOSPITAL

**60, அரசடி வீதி, (தட்டாதெரு சந்திக்கு அருகில்)**

- ☆ வார்ட் (WARD) வசதிகள்
- ☆ O.P.D வெளி நோயாளர் சிகிச்சை காலை 8.30 மணி முதல் இரவு 9 மணி வரை
- ☆ வைத்திய நிபுணர்கள் சேவை மாலை 4 மணிக்கு
- ☆ E.C.G., NEBULIZER, LABORATORY

*குறிப்பு:* வார்ட்டில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களை வைத்திய நிபுணர்கள் பார்வையிடுவர்.

(93282) - நிர்வாகி

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**எமது கல்லூரி அதிபர்** **எமது கல்லூரி பிரதி அதிபர்**



எமது அதிபர்

**திருமிகு வே.சிவசிதம்பரம்**

அவர்கள் அதிபர் தரம் 1 இற்குப் பதவியுயர்வு பெற்றதையிட்டு அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேலும் பல உயர்வுகள் பெற்று சீருஞ் சிறப்புடன் வாழ நாம் இறைவனை வேண்டுகின்றோம்.



எமது பிரதி அதிபர்

**திருமிகு ச.ஸ்ரீராமச்சந்திரன்**

அவர்கள் அதிபர் தரம் 2:1 இற்குப் பதவியுயர்வு பெற்றதையிட்டு அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேலும் பல உயர்வுகள் பெற்று சீருஞ் சிறப்புடன் வாழ நாம் இறைவனை வேண்டுகின்றோம்.

*யா/ஞானசாரியார் கல்லூரி,*
கரவெட்டி. (93284)

**ஆசிரியர்கள்,**
**நிர்வாக உத்தியோகத்தர்,**
**கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.**

மக்கள் வங்கியில் கடன் பெற்ற தென்மராட்சி வர்த்தகர்களின்

# சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பிட வசதி

யாழ்ப்பாணம், ஒக். 11
மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் தமது வீடு. வியாபாரக் கட்டடம் ஆகியவற்றை ஈடாகக் கொடுத்து கடன் பெற்ற வர்த்தகர்களுக்கு அச்சொத்துக்கள் சேதமடைந்திருப்பின் அவற்றை மதிப்பீடு செய்வதற்கான வசதிகளை மக்கள் வங்கி நிர்வாகம் வழங்கவுள்ளது.

காப்புறுதி நிறுவனம் ஊடாக நஷ்டஈடு பெறுவதற்காக இந்தச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களை தகுதி வாய்ந்த மதிப்பீட்டாளர்கள் மூலம் மதிப்பீடு செய்வதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகவும் –

இவ்வாறு சொத்து சேதமடைந்து பாதிக்கப்பட்டவர்களும் மற்றும் அரச நிறுவனங்களில் கடமை புரிந்து கொண்டு கடன் பெற்றோரும் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு முன்னர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் து. ரகு அறிவித்துள்ளார், (ஐ)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் ஆசிரிய மாணவி
செல்வி பொ. சிவனேஸ்வரி
அவர்களின் அன்புத் தந்தையார்
**அமரர் சி. பொன்னம்பலம்**
அவர்கள் 01-10-2001 இல் காலமானார். அவரின் மறைவால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலாசாலைச் சமூகம், ஆசிரியர் கலாசாலை,
கோப்பாய்.
(93307)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மில்றெட் ரெட்ணராணி அலெக்சாண்டர்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மில்றெட் ரெட்ணராணி நேற்று (10 - 10 – 2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற G. W. அலெக்சாண்டரின் (ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் திருமதி சவுந்தரநாயகம் (உப அதிபர், யா/ சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), ராஜன் அலெக்சாண்டர் (முன்னாள் அதிபர், மிருசுவில் R. C), ரட்ணராஜா அலெக்சாண்டர் (பிரான்ஸ்), பொன்ராஜா (வவுனியா), யசிந்தா (பிரான்ஸ்), வசந்தி (கனடா), விக்னராஜா (தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பீலிக்ஸ் பிரகாசம் மற்றும் ரூபி எட்வேட், அருட் சகோதரி அன்ரனி யோசவ் (ஓய்வுபெற்ற அதிபர், யா / திருக்குடும்ப கன்னியர்மடம்), பிலோமினா, வென்சஸ்லோஸ், அஞ்சலீனா பூபாலரட்ணம், கிறிஸ்ரீனா யோக்கிம்பிள்ளை, காலஞ்சென்ற றெஜீனா பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோசவ் பத்திநாதன் (ஆஸ்திரேலியா), சவுந்தரநாயகம் (சென். சாள்ஸ் ம. வி.), யோகராணி, பிறேமலா (பிரான்ஸ்), கருணாவதி, அன்ரன் (பிரான்ஸ்), தேவசகாயம் (பிரான்ஸ்), ஸ்ரெலா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11 - 10 – 2001) வியாழக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ். மரியன்னை பேராலயசேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**திருமதி அ. செ. சவுந்தரநாயகம்**
(மகள்)
118, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(93305)

## தம்பு இராசேந்திரம் (சின்னராசா)

நாயன்மார்கட்டைச் சேர்ந்த தம்பு இராசேந்திரம் 09–10–2001 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு – இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், அனுஷா (பிரான்ஸ்), யசிதரன் (மாருதி ரெக்ஸ்), கஸ்தூரி (யாழ். பல்கலைக்கழகம், 4 ஆம் வருடம்), தனுஷன், அலன், வசீகரன் (மாணவன், யா/ கனகரத்தினம் ம.ம.வி.) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், நாகரத்தினம், பரராஜசிங்கம், தெய்வேந்திரம், பாக்கியவதி, அரசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசமலர், நாகேஸ்வரி, அன்னலிங்கம், குகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மணிவண்ணனின் (பிரான்ஸ்) அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-10-2001) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**யசிதரன்**
(மகன்)
செம்மணி றோட்,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
(93304)

## வர்த்தகருக்கு அபராதம்

நெல்லியடி, ஒக். 11
காலாவதியான குழந்தைகள் பால்மாவை விற்பனை செய்த வர்த்தகர் ஒருவரை ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் அ. பிறேம்சங்கர் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை பஸ் நிலையப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்தே இந்தக் காலாவதியான பால்மாவை பருத்தித்துறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சி. பிரணவன் கடந்த வாரம் மீட்டு குறித்த வர்த்தகருக்கு எதிராகப் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார். (க-109)

சூறாவளியால் பாதிக்கப்பட்ட

# வாழைச் செய்கையாளருக்கு விரைவில் நிவாரணப் பணம்

யாழ்ப்பாணம், ஒக். 11
கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் குடாநாட்டில் ஏற்பட்ட சூறாவளியின் காரணமாக அழிவு ஏற்பட்ட வாழைத் தோட்டச் செய்கையாளர்களுக்கான நிவாரணப் பணம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவு உரும்பிராய் மற்றும் புத்தூர் கமநல கேந்திர நிலையப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்து 653 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

இதற்கான 6 லட்சத்து 4 ஆயிரத்து 300 ரூபா பணத்தை வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிதியில் இருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திடம் வழங்கியுள்ளார்.

உரும்பிராய் கமநல கேந்திர நிலையப் பகுதிக்கு 4 லட்சத்து 95 ஆயிரத்து 850 ரூபாவும் —

புத்தூர் கமநல கேந்திர நிலையப் பகுதிக்கு ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 450 ரூபாவும் வழங்கப்படவுள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் கே. சுந்தரேசன் தெரிவித்துள்ளார். (க-10)

## விளையாட்டு நிகழ்வு

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச்சங்கம் பாடசாலைகளுக்கு இடையில் கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணி — யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் யாழ். இந்துக்கல்லூரி.

★ மாலை 4.45 மணி — கொக்குவில் இந்துக்கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி. (ஐ-3)

## துவக்கு வெடித்து இளைஞர் காயம்

பன்றிக்கு கட்டப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்து இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை மாலை கொடிகாமம் பாலாவி வடக்கில் இடம்பெற்றது.

தோட்டத்தேவைக்கு – தடிகள் வெட்டுவதற்கு அங்குள்ள பற்றைப்பகுதிக்குச் சென்ற வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றது. கட்டுத்துவக்கு வெடித்ததில் இளைஞரின் இடதுகால் பலத்த காயங்களுக்கு இலக்கானது.

காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த வடிவேலு இந்திரகுமார் (வயது 23) என்பவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-117)

# பல்கலையில் நாதஸ்வரம் – தவில் பயிற்றுவிப்பது தொடர்பாக ஆராய்வு

## கலைஞருக்கான பாராட்டு விழாவில் பேராசிரியர் உரை

வலிகாமம் தெற்கு, ஒக். 11
''கர்நாடக இசையை நாதஸ்வர வாசிப்பின் மூலம் பொது மக்களுக்குரிய இசையாக மாற்றியவர் கலைஞர் சுந்தரமூர்த்தி. பல்கலைக்கழகத்தில் நாதஸ்வரம் — தவில்போன்ற இசைக்கலைகளைப் பயிற்றுவிப்பதற்கான திட்டம் பற்றி இப்போது ஆராயப்பட்டு வருகின்றது. மிகவிரைவில் பல்கலைக்கழக மட்டத்தில் இக்கலை பயிற்றுவிக்கப்பட்டு முன்னெடுப்புக் கலைகளாக அவை விளங்க உள்ளன.''

நாதஸ்வர மேதை கலாபூஷணம் கே. ஆர். சுந்தரமூர்த்திக்கு இணுவில் வாழ் மக்களால் அளிக்கப்பட்ட பாராட்டுவிழாவில் தலைமையுரையாற்றிய யாழ் பல்கலைக்கழக நடனத்துறை தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராசா மேற்கண்டவாறு கூறினார்.

இணுவில் கந்தசாமி கோவிலில் நடைபெற்ற இவ்விழாவுக்கு இணுவில் பரமானந்தவல்லி அம்மன் ஆலயத்தில் இருந்து மங்கள இசையுடன் கலைஞர் கே. ஆர். சுந்தரமூர்த்தி ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ உ. அபராஜிதக்குருக்கள் ஆகியோர் ஆசியுரைவழங்கினர்.

13ஆம், 14ஆம் நூற்றாண்டுகளில் தென் இந்திய தேசம் அனைத்தும் கர்நாடகம் என்றே அழைக்கப்பட்டது. அன்று தென் இந்தியாவில் வளர்ந்திருந்த இசையும் கர்நாடக இசை என்று அழைக்கப்பட்டது. கர்நாடக இசையான நாதஸ்வரத்தின் மூலம் பல ஒலி வீச்சுக்களை அமைத்து மேலைநாட்டவர்கள் கூட நாதஸ்வரத்தைப் பயில ஆர்வங்கொள்ள வைத்தவர்கள் நாதஸ்வரக் கலைஞர்கள்.

கலைஞர்களுக்குப் பொதுவாக ஞானச்செருக்கு இருப்பது உண்டு. ஆனால் சுந்தரமூர்த்தி ஞானச்செருக்கு அற்றவர். அன்பு, அடக்க ஒடுக்கம், பக்தி மிகுந்தவர். மக்களுக்குத் தன்னை அடிமையாக்கிச் சேவை செய்பவர் என சபா. ஜெயராசா தமது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் பாராட்டுப் பத்திரம் வாசித்து அளித்தார். டாக்டர் க. பாலசுப்பிரமணியம் கலைஞருக்கு தங்கப்பதக்கம் அளித்துக் கௌரவித்தார்.

கலாபூஷணம் என். கே. பத்மநாதன் வழங்கிய பாராட்டுரையில் கூறியதாவது:-

தற்போது நாதஸ்வரம் வாசிக்கும் — பழகும் பிள்ளைகளில் பத்து வீதமானவர்கள்கூட நாதஸ்வரத்தை முறைப்படி கற்று — சாதகம் செய்வதில்லை. சாதகம் செய்ய, செய்யத்தான் கலை நுட்பம் வளரும், பெருந்தும் சாதனைகளும் புரியலாம். நாதஸ்வரத்தின் நுட்பங்களை அறிந்து வாசிப்பவர் இன்று நம்மத்தியில் மிகக் குறைவு. பல கலைஞர்களின் பிள்ளைகள் நாதஸ்வரம் வாசிப்பதைக் கைவிட்டு வருகின்றார்கள். சுந்தரமூர்த்தி போன்ற கலைஞர்களிடம் முறைப்படி குருகுலம் அமைத்து நாதஸ்வரம் பயில வேண்டும். நாதஸ்வரக்கலைஞர்கள் எப்படி வாழவேண்டும் என்பதை தம் வாழ்க்கை மூலம் எடுத்துக்காட்டி வருபவர் சுந்தரமூர்த்தி அவர்கள்— என்றார்.

பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா, ஆசிரியர் ஆறு. திருமுருகன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

தர்மகர்த்தா சபை உறுப்பினர் ஏ. சி. சண்முகலிங்கம் நாதஸ்வரக் கலைஞருக்கு ''நாத அமிர்த பத்தினி'' என்ற பட்டத்தை வழங்கினார்.

கலைஞர் சுந்தரமூர்த்தி தமது பதிலுரையில் நாதஸ்வரக் கலையை ஆரம்பகாலத்தில் மிகக் கஷ்டமான ஏழ்மை நிலையில்தான் கற்றேன். கலையைப் பயில்வதற்காக தரக்குறைவான பல வேலைகளையும் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. நான் பயின்ற கலை நம் மக்களுக்காகவே பயன்படவேண்டும். எனக்கு வேண்டிய சகல வசதிகளையும், உதவிகளையும் ஊர் மக்கள் வழங்கும் போது நான் ஏன் வெளிநாடு செல்ல வேண்டும்? எம்மக்களுக்காகவே காலம் முழுவதும் சேவை செய்வேன் — என்றார். (க-152)

## அஞ்சலி

வட இலங்கை சர்வோதயத் தொண்டரும்
எமது மன்றத்தின் புரவலருமான
**கந்தையா திருநாவுக்கரசு**
அவர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தி அடைக;
**இளங்கலைஞர் மன்றம், நல்லூர்.**
(93302)

# கைதடி மாணவர்களுக்கு

கைதடி குருசாமி வித்தியாலயத்தில் இருந்து ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் நடைபெறவுள்ளன. பரீட்சைக்குத் தோற்ற வசதியாக சகல மாணவர்களையும் அன்று காலை 9 மணிக்கு பாடசாலையில் சமுகமளிக்குமாறு அதிபர் க.அரியதாஸ் அறிவித்துள்ளார்.

மனைப்பொருளியல் பாடத்துக்குரியவர்கள் அன்றைய தினம் செய்முறைப் பரீட்சைக்குத் தயாராக வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2001ஆம் ஆண்டு 5ஆந் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 134 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த கிளி/அ.த.க.பாடசாலை மாணவன

**செல்வன் தபாலசிங்கம் தர்ஷிகன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவருக்குக் கல்வி புகட்டிய ஆசிரிய குழாத்திற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு.திருமதி பாலசிங்கம் (குடும்பம்)
வண்ணாங்கேணி - பளை.
(93293)

## ஏழாவது பிறந்தநாள் வாழ்த்து

*11-10-2001*

**செல்வன் தனேந்திரன் துரைராஜன்**

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த தனேந்திரன் சிவராணி (தயா) தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வன்

துரைராஜன்

தனது 7ஆவது பிறந்த நாளை இன்று (11-10-2001) வியாழன் தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, தம்பி, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மாமாமார், மாமிமார், லண்டனில் வசிக்கும் ராஜன் மாமா, ரசி அத்தை, கஜனன், அபிஷேகன், ஆருணன், மச்சாள்மார், ஜேர்மனியில் வசிக்கும் செந்தில் சித்தப்பா, குலமதி அத்தை, கனடாவில் இருக்கும் அத்தைமார், பாட்டாமார், பாட்டிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு.
தகவல்: ச.க.தனேந்திரன்.
(93298)

## ஒத்திவைக்கப்பட்டுள்ளது

**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**
**உயர்தர மாணவ ஒன்றுகூடல்**

*எமது கல்லூரி மாணவன் காந்திராஜ் டிலோசன் விடுதலை தொடர்பான நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளதால் எம்மால் எதிர்வரும் (14.10.2001) ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட உயர்தர மாணவ ஒன்று கூடல் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.*

உயர்தர மாணவர் மன்றம்.
10.10.2001
(93289)

## கேள்வி அறிவித்தல்

**சமைக்காத உணவுப் பொருள்கள் வழங்குதல் - 2002**
**அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

2001.10.08ஆம் திகதியிடப்பட்டு 2001.10.09ஆம் திகதி வெளியிடப்பட்ட மேற்படி விளம்பரத்தின் இரண்டாம் பந்தியில் 2001.10.21ஆம திகதி பி.ப.2.00மணி எனக் குறிப்பிடப்பட்டுள்ள முடிவு திகதி 2001.10.22 பி.ப.2.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

வைத்திய கலாநிதி (செல்வி) நவமலர் க்னகரத்தினம்,
பணிப்பாளர்.
10.10.2001 (C/18637)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியையும் பகுதித் தலைவருமாகிய

**திருமதி**
**கேதாரகௌரி இராஜரெத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை,*
*யாழ்ப்பாணம்.*
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா.அ.சங்கம், பழைய மா.சங்கம்.
(93285)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உபஅதிபர்
திருமதி அஞ்சலினா செல்வரஞ்சிதம் சௌந்தரநாயகம்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி மில்ரெட் ரட்ணராணி அலெக்ஸாண்டர்**

அவர்களின் மறைவையிட்டு நாம் பெரிதும் துயரமடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மாசாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No: 3422
- அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
சிற்றூழியர்கள்.
(93299)

## விசேட நிவாரணம்

பச்சிலைப்பள்ளியிலிருந்து இடம்பெயர்ந்ததன் பின் 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத நிவாரணத்தை பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக எடுக்கத் தவறியவர்களுக்கு கடந்த ஜுன் மாதம் விசேட நிவாரணம் வழங்கப்பட்டது.

எடுக்கத்தவறியவர்கள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பளைப்பிரதேச செயலர் எஸ்.புத்திசிகாமணி தெரிவித்துள்ளார். (க-ரி)

## சங்கக் கடைகளில் ரவை 32 ரூபா!

பிறிமா ஆலை நிறுவனம் ரவையின் விலையை 2ரூபாவால் அதிகரித்ததைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் அதன் விலையை அதிகரித்துள்ளது.

பல நோ.கூ. சங்கங்களில் கிலோ 30 ரூபாவா விற்கப்பட்ட ரவை தற்போது 32 ரூபா விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மேற்படி சமாசம் அறிவித்துள்ளது. இந்த விலை நிர்ணயத்தைப்பின்பற்றி ப.நோ.கூ.சங்கங்கள் ரவையை பாவனையாளர்களுக்கு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-17)

## செய்முறைப் பரீட்சைகள்

கச்சாய் அ.த.க. பாடசாலையிலிருந்து ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு விவசாயம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 15ஆம் 16ஆம் திகதிகளிலும் மனைப்பொருளியல் பாடத்துக்கான செய்முறைப் பரீட்சை 18ஆம் திகதி வியாழக்கிழமையும் கொற்றாவத்தை "ஸ்ரடி சேக்கிள்" கல்வி நிலையத்தில் இயங்கும் அல்லாரை அ.த.க.பாடசாலையில் நடைபெறும் என பாடசாலை அதிபர் க.மங்களேஸ்வரன் தெரிவித்துள்ளார். (க-ரி)

★ ★ ★

வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலையில் இருந்து இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 15ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

வலிகாமத்தில் இயங்கும் பாடசாலையில் கல்வி கற்போருக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்திலும் -

வடமராட்சியில் இயங்கும் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை பளை மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. குறிப்பிட்ட இரு தினங்களிலும் மாணவர்கள் அனைவரையும் பரீட்சையில் கலந்துகொள்ளுமாறு அதிபர் எஸ்.இராமலிங்கம் அறிவித்துள்ளார். (க-10)

★ ★ ★

மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலையிலிருந்தும் கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையிலிருந்தும் இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இதன்படி எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை சங்கீத பாடப்பரீட்சையும், 16ஆம் திகதி மனைப் பொருளியல் பாடப் பரீட்சையும் 17ஆம் திகதி விவசாயம், உடற்கல்வி ஆகிய பாடங்களுக்கான பரீட்சையும் நடைபெறவுள்ளன.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை நாளை வெள்ளிக்கிழமை செய்முறைப் பரீட்சை நடைபெறும் பாடசாலையில் போதிய விளக்கத்தை பெற்றுச்செல்லுமாறு பாடசாலை அதிபர்கள் கேட்டுள்ளனர்.

★ ★

மிருசுவில் அ.த.க. பாடசாலையில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களில் விவசாயம், மனையியல், சங்கீதம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றும் மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 15ஆம் திகதி நெல்லியடி விக்னேஸ்வராக் கல்லூரி வீதியில் இயங்கும் 'எக்ஸலென்ற்' கல்விநிலையத்தில் நடைபெறும் எனவும் விவசாய பாடத்துக்குத் தோற்றும் மாணவர்கள் அதற்குரிய ஆயுதங்களுடன் வருமாறும் பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (க-117)

## பாராட்டி வாழ்த்துவதுடன் நன்றி கூறுகின்றோம்



யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவி

**செல்வி பரம்சோதிநாதர் தாமரா**

(141 புள்ளிகள்)

Dr.K.S.பரம்சோதிநாதர்-Dr.(Mrs.) P. கிருஷ்ணவேணி தம்பதிகளின் செல்வப்புதல்வி

**P.தாமரா**

2001ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 141 புள்ளிகளைப் பெற்றதையிட்டு இவரைப் பாராட்டுவதுடன் இவரின் வெற்றிக்கு வழிகாட்டி அயராது உழைத்தவர்களான பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் வகுப்பாசிரியை, ரியூசன் ஆசிரியர்கள் சகலருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இவர் மேன்மேலும் கல்வியிற் சிறந்து விளங்க எல்லாம்வல்ல இறைவனின் ஆசியையும் வேண்டி நிற்கின்றோம்.

| | | |
|---|---|---|
| | அம்மா | - அப்பா |
| | சகோதரர் | - ப.பிரேந்திரா |
| *பரம்சோதி* | சகோதரி | - ப.துஷாரா |
| *வைத்திய நிலையம்,* | பெரியமாமா | - ம.கிருஷ்ணகுமார் (கண்ணன்) |
| *குளப்பிட்டி றோட்,* | சின்னமாமா | - ம.உதயகுமார் (உதயன்) |
| *ஆலடி,* | தாத்தா | - வ.மதியாபரணம் |
| *ஆனைக்கோட்டை.* | அம்மம்மா | - ம.அன்னலட்சுமி (சரசு) |

(93288)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2001ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் - 125 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த *யாழ்.மத்திய கல்லூரி* மாணவன் செல்வன் சிவராசா சிவசொருபன அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவருக்குக் கல்வி புகட்டிய ஆசிரியர் குழாத்துக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திரு.திருமதி.சிவராசா - சாந்தினி
(C.T.B) குடும்பத்தினர்.
*121, முதலாம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*
(93297)

## நன்றியுடன் பாராட்டுகின்றோம்



யாழ்.புனித சம்பத்திரிசியார் கல்லூரி
மாணவன்
செல்வன்

**பிரகாஷ் பாலச்சந்திரன்**

2001 - 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு அவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்கள், வகுப்பாசிரியர் திருமதி M.J.கலிஸ்ரஸ் (யசிந்தா மிஸ்) அவர்களுக்கும் நாம் நன்றி பல கூறிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திருமதி க.இராஜரட்ணம்
(அம்மம்மா).
திரு..திருமதி.பாலச்சந்திரன்,
திரு.திருமதி. பாஸ்கரன்
*418, நாவலர் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*
(93301)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/திருநெல்வேலி றோ.க.த.க.பாடசாலையில் 2001 - தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களாகிய,**

**விவேகானந்தன் சஹாயா 129 புள்ளிகள்**
**ஞானகுமாரன் நிசாந்தன 128 புள்ளிகள்**
**செல்வகுமாரன் பபிதா 122 புள்ளிகள்**

ஆகியோரையும் அவர்களை வழிப்படுத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் எமது பாடசாலை அதிபர் திருமதி க.கணேசமூர்த்தி அவர்கள் அதிபா பதவி (S.L.P.S.) இரண்டுக்கு பதவிஉயர்வு பெற்றமைக்காக அவரையும் நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம், பா.அ.ச.
(93296)

## பாராட்டுகிறோம்

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலிருந்து 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களையும் சேவை மனப்பான்மையுடன் மேலதிக வகுப்புகளை நடத்திக் கற்பித்த ஆசிரியைகளையும், அதிபர்களையும் நாம் பாராட்டுகிறோம்.

*சித்திபெற்றோர்*

1. இரஞ்சன் டில்றுக்சன்
2. கௌசிகா பாலேந்திரன்
3. கிரிவர்த்தினி சோமசுந்தரம்
4. அருமைநாயகம் சிவரஞ்சன்
5. இராஜேஸ்வரக் குருக்கள் ஸ்ரீராம்
6. வரதராஜமூர்த்தி சஞ்சயன்

*பாராட்டுபவர்கள்:*

தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலய நிர்வாக சபை
ஸ்ரீ சுவாஸ் தொலைத்தொடர்பு நிலையம் - தாவடிச் சந்தி
விநாயகர் தொலைத்தொடர்பு நிலையம் - தாவடிச் சந்தி
சிக்கோ - தாவடிச் சந்தி
செல்வராஜா பழக்கடை - தாவடிச் சந்தி
கரன் பார்மசி - தாவடிச் சந்தி
A.S.N.தொலைபேசிச் சேவை - வன்னியசிங்கம் வீதி - தாவடி
(C/18640)




அருணலு

ARUNALU

## கொமர்ஷல் வங்கியின்

'அருணலு' சேமிப்பு வாரத்தில்

### ஆதரவு தேடும் சிறார்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிசமைப்போம்.

***(01-10-2001* தொடக்கம் *12-10-2001* வரை)**

*நீங்கள் உங்கள் பிள்ளையின் பெயரில் 'அருணலு' சிறுவர் கணக்கொன்றினை ஆரம்பியுங்கள்!*

*நாங்கள் ஆதரவு தேடும் பிள்ளையின் பெயரில் கணக்கொன்றினை ஆரம்பிப்போம்.*

இது ஒரு பிள்ளையின் வாழ்வில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தப்போகும் வாரமாகும்.

*எவ்வாறு.....?*

**உங்கள் பிள்ளைக்கு இவ்வாரத்தில் 'அருணலு' சிறுவர் கணக்கினை ஆரம்பிப்பதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றினைச் சேர்ந்த ஆதரவு தேடும் பிள்ளையின் பெயரில் 'அருணலு' சிறுவர் கணக்கொன்றினை நாம் ஆரம்பிப்பதற்கு உதவுகின்றீர்கள்.**

**எனவே 12.10.2001இற்கு முன்பாக 'அருணலு' கணக்கினை ஆரம்பித்து இரண்டு சிறார்களின் நம்பிக்கையான எதிர்காலம் உதயமாக உதவுங்கள். மேலதிக விவரங்களுக்கு**

**கொமர்ஷல் வங்கியின் யாழ்.கிளையினை நாடுங்கள்.**

அருணலு

ARUNALU

# கொமர்ஷல் வங்கி

(சி18642)


## பாராட்டுகின்றோம்



எமது பாடசாலையின் பழையமாணவரும்
முன்னாள் ஆசிரியருமாகிய
அளவையூர்

**அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா**

அவர்களுக்கு

யாழ்.பல்கலைக்கழகத்தினால் கௌரவ முதுகலைமாணிப் பட்டம் வழங்கப்பட்டமையையிட்டு அவர்களை மனமாரப் பாராட்டுவதோடு அவரின் அருளாசி மேன்மேலும் கிடைக்க வேண்டுமென ஸ்ரீ நாகவரத நாராயணனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/அளவெட்டி அருணோதயக்கல்லூரி.

(93306)

## சேவை நலன் பாராட்டு விழா

### திருமதி ப.தவநேசன்

**ஆசிரியர் - வகுப்பு - I**

அவர்கள் எமது பாடசாலைக்கு ஆற்றிய அளப்பரிய சேவையைப் பாராட்டி அவரைக் கௌரவிக்குமுகமாக, இன்று நடைபெறுகின்ற சேவை நலன் பாராட்டு விழாவில் அவரும் அவரது குடும்பமும் எல்லா நலனும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/புனிதமரியாள் வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(93292)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக
4ஆம் வருட புவியியற் சிறப்புக்கலை மாணவி
இ.கஸ்தூரி அவர்களின்
அன்புத் தந்தைவார்

### இராசரத்தினம்

அவர்கள் 09.10.2001 அன்று காலமானதையிட்டு அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

4.ஆம் வருட புவியியற்றுறை மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(93312)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உயர்பட்டப் படிப்புக்கள் பீடம்

1) **கல்வி முதுமாணிக் கற்கைநெறி - 2001/2002**

மேற்படி கற்கைநெறிக்கான தொடக்க நிகழ்வு 2001.10.18 வியாழககிழமை பிற்பகல் 2 மணிக்குப் பல்கலைக்கழகப் பொருளியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

2) **ஈராண்டுப் பட்டப்பின் கல்வித் தகைமைக் கற்கைநெறி (பகுதி நேரம்) - 2001/2003**

மேற்படி கற்கைநெறிக்கான தொடக்க நிகழ்வு 2001.10.17 புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவத் துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி கற்கைநெறிகளுக்குப் பதிவு செய்தவர்கள் தவறாது இந் நிகழ்வுகளில் பங்குபற்றவும்.

3) **ஈராண்டுப் பட்டப்பின் கல்வித் தகைமைக் கற்கைநெறி (பகுதி நேரம்) - 2000/2002 : II**

மேற்படி கற்கைநெறிக்கான விரிவுரைகள் 2001.10.20 சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
2001.10.09

(C-18641)


ராஜா யாழ்ப்பாணம்

விஜய், சிம்ரன்
நடித்த

ப்ரியமானவளே

தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30. 2. 5 (புதிய நேரம்)

(C/18457)


# மரண அறிவித்தல்கள்

## Lion Dr.மார்க்கண்டு பாலசுப்பிரமணியம்

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட Lion Dr.மார்க்கண்டு பாலசுப்பிரமணியம் 8.10.2001 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு - நாகம்மா தம்பதியினரின் புதல்வரும், காலஞ்சென்ற பொன்னையா - பாக்கியம் தம்பதியினரின் மருமகனும், இராசமலரின் அன்புக் கணவரும், ரஞ்சிற் (பொறியியலாளர்,UK) அவர்களின் பாசமிகு தந்தையும், புனிதவதி (கண் சத்திர சிகிச்சை நிபுணர், UK), அவர்களின் மாமனும், ஸ்ரீநாத், அர்ச்சன், ஆனந்த் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான நேசரத்தினம், தங்கமலர் மற்றும் இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற A.O. - கச்சேரி; தற்போது A.O. - மூளாய் தனியார் வைத்தியசாலை), இரத்தினேஸ்வரி (France), லங்காதேவி (UK), மகாதேவி ஆகியோரின் சகோதரனும், Dr.பேரானந்தம் (C.D.M.H. - மானிப்பாய்), சரோஜாதேவி, பத்மேஸ்வரன் (T.O, RDA - திருகோணமலை), இராஜகுலேந்திரன் (தாதி உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை), மகாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2001) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*No .30, Ridge way place,*
*Colombo 04.*
*Tel. No. - 504 066*

தகவல்:
Dr.பொ.பேரானந்தம்
(தாவடி)
பொ.இராஜகுலேந்திரன்
(மானிப்பாய்)

(C/18639)

## சட்டநாதர் குலநாயகம்

**(குலம் விதானையார்)**

வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வளாக வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் சட்டநாதர் குலநாயகம் நேற்றுமுன்தினம் இரவு (09.10.2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சட்டநாதர் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சட்டநாதன் (லண்டன்), கோகிலநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையும் அன்னலட்சுமிப்பிள்ளையின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சண்முகநாதனின் மைத்துனரும் ரதியின் (ஜேர்மனி) மாமனாரும் கீர்த்திகன், கிருஷன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.10.2001) புதன்கிழமை வளாக வீதி, திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ஸ்ரீசாந்தி நிகேதன்'*
*வளாக ஒழுங்கை,*
*திருநெல்வேலி.*

தகவல்:
பரமேஸ்வரி குலநாயகம்.
(மனைவி)

(93317)

# கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகளை கைவிடக் கோருகின்றனர் புலிகள்

யாழ்.குடாநாட்டில் கலாசாரச் சீரழிவு நடவடிக்கையில் ஈடுபடுவோர் உடனடியாகத் தமது நடவடிக்கைகளை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறை விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மண் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் ஸ்ரீலங்கா இராணுவ இயந்திரமும், அதன் அடிவருடிகளான எமது இனத்தின் தன்மானத்தை விலை பேசிக்கொண்டிருக்கும் - தேசவிரோதக் குழுவும் திட்டமிட்ட ரீதியில், எமது இனத்தின் தனித்துவத்தினை அழித்தொழிக்கும் வகையில் கலாசார சீரழிவு நடவடிக்கைகளுக்கு தூபமிட்டுவருகின்றன.

இதன் ஒரு வடிவமே ஆபாசப் படங்கள் யாழ். குடாநாட்டில் தாராளமாகக் கிடைப்பதை இலகுபடுத்தியுள்ளமை ஆகும். எமது இளந்தலைமுறையினரின் விடுதலை மூச்சை அடக்கும் ஒரு தந்திரோபாயமாகவே இராணுவமும் அதன் அடிவருடிகளும் இத்தகைய படங்கள் கிடைப்பதை எமது பிரதேசத்தில் இலகுபடுத்தி வருகின்றன. இவற்றின் மூலம் எமது இனத்தின் ஆணிவேரைப் பலவீனப்படுத்தும் யுத்தத்தை எதிரி மறைமுகமாக மேற்கொண்டு வருகின்றான்.

இதனை எம் இனத்தின் எதிர்கால நலனில் அக்கறை கொண்ட எந்தத் தமிழ் மகனாலும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எமது சமூகத்துக்கு இன்று ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை, சமூக நலனில் அக்கறை கொண்ட சில சமூகத் தலைவர்கள் அண்மைக் காலங்களில் சுட்டிக்காட்டி வந்துள்ளனர். எனினும் இது தொடர்ந்தே வருகின்றது. அத்துடன் எதிரியின் எதிர்பார்ப்பு நிறைவேற ஆரம்பித்துள்ளமையையே எம் மாணவர்களின் கல்வித் தரத்தில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால வீழ்ச்சி நிலை எடுத்துக்காட்டுகிறது.

எனவே இவ்விடயங்களில் விழிப்பாக இருக்குமாறு எமது மக்களைக் கேட்டுக்கொள்வதுடன் மினிசினிமா உரிமையாளர்களும் வீடியோ நாடா விநியோகஸ்தர்களும் எமது மண்ணில் கலாசாரச் சீரழிவுக்குத் துணை போகக் கூடிய வகையிலான தமது நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (ம)

## தென்மராட்சி நகரில் சேதமடைந்த கட்டடங்களை படமெடுத்த 'பிலிம்' பறிமுதல்

தென்மராட்சி,ஒக்.11

சாவகச்சேரி நகரப்பகுதியில் படை அதிகாரி தங்கி இருந்த வீட்டுக்கு அருகில் இருந்த சேதமடைந்த வீட்டினைப் புகைப்படமெடுத்ததை அவதானித்த படையினர் அந்தக் 'கமெரா'வில் இருந்த 'பிலிம்' சுருளைப் பறித்தெடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் நகரப் பகுதியில் சேதமடைந்துள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளைப் புகைப்படம் எடுக்க ஏற்பாடு செய்திருந்தது. இதற்கான அனுமதி ஜனாதிபதியிடம் இருந்து பெறப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் நகரப் பகுதியில் வணிகர் மன்றத்துக்காக சேதமடைந்த கட்டடங்களைப் படமெடுத்துக்கொண்டிருந்தவர், இராணுவ அதிகாரி இருந்த வீட்டுக்கு அருகில் உள்ள வர்த்தகரின் சேதமடைந்த வீட்டைப் படமெடுக்க முற்பட்டதாகவும் -

அச்சமயம் அங்கு வந்த படையினர் அவரிடம் இருந்து 'பிலிம்' சுருள்களைப் பறிமுதல் செய்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதனால் அன்றையதினம் 50க்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள், வீடுகளைப் படமெடுக்கத் திட்டமிட்டிருந்த வணிகர் கழகத்தினர் 'பிலிம்' சுருளைப் பறிகொடுத்த நிலையில் ஏமாற்றத்துடன் திரும்பினர். (ம-117)

## வருமானமின்மையால் குடும்பஸ்தர் நஞ்சருந்தித் தற்கொலை!

தென்மராட்சி,ஒக்.11

இடம்பெயர்வினால் நிரந்தர வருமானமின்றித் தவித்த பத்துப் பிள்ளைகளின் தந்தையொருவர் நஞ்சருந்தி உயிரை மாய்த்துக்கொண்ட பரிதாபச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

நாகர்கோயில் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து குடத்தனை கிழக்கில் தங்கியிருந்த கே.கந்தசாமி (வயது 50) என்பவரே மரணமானவராவார்.

நஞ்சருந்திய நிலையில் மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்ட சிறிது நேரத்தில் அவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## போக்குவரத்துக் கண்காணிப்புத் தொண்டர் படுகொலை:

# நிராயுதபாணிகளாகத் தங்களை அடையாளம் காட்டியோரின் வேலை

## ஈ.பி.டி.பி. ஜெகன் கண்டன அறிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.11

வீதிப் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவுத் தொண்டர் விமலேஸ்வரனின் கொலையை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதம அமைப்பாளருமான கே.வி.குகேந்திரன்(ஜெகன்) வன்மையாகக் கண்டித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நிராயுதபாணிகளாகத் தம்மை அடையாளங்காட்டி நாசகார செயல்களில் ஈடுபடும் கொலைகாரர்களின் கொலைக்கரம் மீண்டும் ஒரு தடவை யாழ்நகரில் அரங்கேறியுள்ளது மிகவும் வேதனைக்குரியதும் கண்டனத்துக்குரியதுமாகும்.

வீதிப் போக்குவரத்துப் பிரிவில் பணிபுரிந்த இந்த அப்பாவி இளைஞனின் குரல்வளையை நசுக்கியதன் மூலம் இக்கொலைகாரர்கள் ஈட்டிய நன்மை என்ன?

இப்படிப்பட்ட அப்பாவிகளின் கொலை எம் தேசத்தை மீட்பதற்கு வழிவகுத்துவிடுமா? நிராயுதபாணிகளான எவரையும் எதிரிகளாக நோக்காமல், தொண்டு செய்து நின்ற இந்த இளைஞனின் கொலைச் செயல் அப்பாவிகளான பொதுமக்களை மீண்டும் குறிவைக்கும் ஒரு படியாக அரங்கேறியுள்ளது என்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை.

இந்த நாசகாரச் செயல்களில் ஈடுபடும் சூத்திரதாரிகளை இனியும் மக்கள் ஆதரிப்பதனால் இப்படிப்பட்ட அப்பாவி இளைஞர்களின் உயிர்கள் காரணமின்றி பறிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

எனவே இனியும் இப்படியான அநியாயக் கொலைகள் இடம்பெறாமல் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக அனைத்துத் தரப்பினரும் இத்தகைய சம்பவங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பலியானவரின் குடும்பத்துக்கு 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடு

யாழ்ப்பாணம்,ஒக்.11

வீதிக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டு உயிரிழந்த ஸ்ரீஸ்கந்தராசா விமலேஸ்வரனின் குடும்பத்துக்கு நஷ்டஈடாக ஐம்பது ஆயிரம் ரூபா வழங்கப்படும் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.ஜெகன் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி. அமைப்பு நேற்று விடுதத செய்திக்குறிப்பு ஒன்றில் இந்தத் தகவலை அவர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவரின் மரணச் சடங்குகளுக்காக மேலதிகமாக - உடனடியாக - பத்தாயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் -

-வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சு நிதியில் இருந்து மேற்படி உதவித் தொகைகள் வழங்கப்படும் எனவும் -

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இலக்கிய அனுபவப் பகிர்வு

'பயணங்களும் பகிர்வுகளும்' என்னும் தலைப்பில் வெளியூர் இலககிய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் நிகழ்வு ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் பணிமனையில் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் 'அலை' அ. யேசுராஜா, செங்கை ஆழியான் ஆகியோர் தமது வெளியூர் இலக்கிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டம்

வலி.வடக்கு,ஒக்.11

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடையேயான 12 வயதிற்கு உட்பட்டோருக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

அளவெட்டி அருணோதயக் கல்லூரி எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி. (ம-86)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் கூட்டம்

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் தலைவர் இமகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ம-86)


## வாழ்த்தும் இறை ஆசியும்

யாழ்.புனித பத்திரிசியார் பாடசாலை மாணவன்

### செல்வன் குலசேகரம் டிறோசன்



2001 ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 124 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவருடைய வெற்றிக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும், ரியூசன் ஆசிரியை ஜோதினிக்கும், நவாலி மரிஸ்ரெல்லா அன்ரிக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். இவர் மேலும் கல்வியில் சிறந்து விளங்க இறை ஆசியை வேண்டிநிற்கின்றோம்.

80, பீச் றோட்,
நாவாந்துறை.

அப்பா, அம்மா,
அக்கா - கு.மயூரி, தங்கை - கு.மதுமதி

(93316)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மாணவி

### செல்வி யசின் லக்சனா இராசசேகரம்



2001 ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையிட்டு மகிழ்ச்சியுறும் நாம் அவர் மேன்மேலும் கல்வி உலகில் சிறப்புற்று விளங்க, புனித செபமாலை அன்னையின் அருள்வேண்டி உளமார வாழ்த்துகிறோம்.

செபமாலை மாதா
கோயிலடி,
உடுவில், சுன்னாகம்.

ஜேர்மன் அப்பா, அம்மா,
சகோதரர்கள், ஞானப்பெற்றோர்,
உறவினர், உடுவில் நண்பர்கள்.

(93310)


## மரண அறிவித்தல்கள்

### கிருஷ்ணபிள்ளை அம்பலவாணர்

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், 622, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை அம்பலவாணர் 09.10.2001 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கி.செல்லத்துரை, பத்மநாதன் மற்றும் நடராசா ஆகியோரின் சகோதரரும், பாரதி (ஆசிரியர், மாலைதீவு), சரவணபவன் (ஜேர்மனி), திருமதி சந்திரிக்கா சிவகுமாரன் (7, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), திருமதி வசந்தமாலா சோமசேகரம் ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரசுவாமி சிவகுமாரன் (யாழ். மத்திய கல்லூரி), சோமசேகரம் (அதிபர், அராலி வடக்கு, அ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(93315)

தகவல்:
மா.சோமசேகரம்.

### மாணிக்கம் சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும்கொண்ட அமரர் மாணிக்கம் சிவசுப்பிரமணியம் 7.10.2001 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கனகமணியின் அன்புக் கணவரும் சுதாகரன்(நோர்வே), சுமதி (ஆசிரியை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), ரமணி, சசிகரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஞ்சுதமலர்(நோர்வே), கருணாகரன் (சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்) ஆகியோரின் மாமனாரும் நிறோஷன், லரிசன், அபர்ணா ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11.10.2001) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மாயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

(C/18643)

தகவல்:
து.கருணாகரன்
(மருமகன்)

### கணபதிப்பிள்ளை துரைராஜா

இல.31, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூரைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை துரைராஜா நேற்று (10.10.2001) புதன்கிழமை காலை அமரராகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அவர்களின் மூத்த மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்துரை (C.T.B.) மற்றும் செல்வமணி, அன்னம்மா ஆகியோரின் சகோதரனும் இராஜேஸ்வரி (கனடா), பவளராணி (நல்லூர்), கோமதிஅம்மா (கனடா), சண்முகராஜா (ஜேர்மனி), சுரேந்திரன் (கனடா), லோகநாதன் (டென்மார்க்), விஜயராஜா (சுவிஸ்), விஜயரட்ணம் (லண்டன்), கிருபாகரன் (லண்டன்), சிறீஸ்கந்தராசா (கனடா), ரஜனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், தர்மராஜா (கனடா), தங்கராஜா (மட்டுவில், சாரதி), இராஜேந்திரன் (கனடா), றோகினி (ஜேர்மனி), கிருஜா (கனடா), கிரிஜா (டென்மார்க்), நதி (சுவிஸ்), கௌசி (கனடா), தங்கேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், கீதாஞ்சலி, கஜேந்திரன், ரூபாகரன், கோபிகா, (வேம்படி மகளிர் கல்லூரி), மோகன்ராஜ் (யாழ். இந்துக் கல்லூரி), நிசாந்தி (சென்பெனடிக் வித்தியாலயம்) ஆகியோரின் பேரனும் சத்தியசீலனின் (பலசரக்கு வியாபாரம், நல்லூர்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2001) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு (புதிய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சேரிநல்லூர் வீதி,
இல.31, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(93318)

தகவல்:
திருமதி து.பரமேஸ்வரி
(மனைவி)
சி.தங்கராஜா (மருமகன்)
சாரதி, மட்டுவில்

# கண்ணீர் அஞ்சலி

## உதிரம் சொரியும் விழிகளுடன்....!

**ஆருயிர் நண்பன் ஸ்ரீஸ்கந்தராசா விமலேஸ்வரன்**

*உதிரம் சொரிகிறது விழிகள். எதிரியாக உன்னைக் கருதியவர்கள் யாரென்று*
*ஏங்குகிறது நெஞ்சம்.*
*உன்னைக் கொடூரமாகக் கொலை செய்தவர்களின் கோழைத்தனம் கண்டு*
*கொதிக்கிறது தேகம்.*
*நண்பனே! உன்னை இழந்தது சோகம். உன் சேவைகளை எண்ணித் துடிக்கிறது இதயம்.*
*நண்பா நீ செய்தது என்ன?*

வீதியில் வாகனப் போக்குவரத்துக்களை ஒழுங்குபடுத்தும் கடமைப் பொறுப்பை ஏற்றாய்! விபத்துக்களைத் தடுத்து மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டாய். நெரிசல்கள் மிகுந்த வாகனப் போக்குவரத்து குடாநாட்டு வீதிகளில் இல்லை. ஆனாலும் தன்னிச்சையாகச் சவாரி செய்யும் சைக்கிள்கள், வேகமாகப் பறக்கும் படையினர் வாகனங்கள், போக்குவரத்துப் பொலீஸார் இல்லாத - கண்காணிப்பார் அற்ற - வீதிகள், வீதிகளின் ஒழுங்குகளை மீறும் தாறுமாறான சம்பவங்கள் - இவையெல்லாம் வீதி விபத்துக்களை அடிக்கடி தோற்றுவித்துக்கொண்டிருந்தன.

இத்தகைய வீதி விபத்துக்களைக் கண்டு அழுது புலம்பிக்கொண்டிருக்காமல் இவற்றைத் தடுக்கவும் தவிர்க்கவும் வேண்டியதாக இருந்தது. இந்த நிலையில்தான் வீதிப் போக்குவரத்துக்களைக் கண்காணிக்கும் தொண்டர்களின் சேவை உணரப்பட்டது.

வாகனப் போக்குவரத்துக்களை ஒழுங்குபடுத்தி மனித உயிர்கள் அகாலவேளையில் பலிகொள்ளப்படுவதைத் தடுக்கும் சேவையில் தொண்டர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். நிராயுதபாணிகளாக எவரையும் எதிரிகளாக நோக்காமல் தொண்டுசெய்துநின்ற இவன் கொலையுண்டது நியாயமானதுதானா?

**ஸ்ரீஸ்கந்தராசா விமலேஸ்வரன்** என்னும் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுத் தொண்டன் நேற்றுக் காலையில் யாழ். நாவலர் வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றான். இளம் வயதிலேயே குடும்பப் பொறுப்பை ஏற்கவேண்டிய தேவை இவனுக்கேற்பட்டது. தந்தையை இழந்துவிட்டிருந்த இவனுக்கு உடன்பிறப்புக்கள் ஆறுபேர். குடும்பத்தின் வறுமையைப் போக்கி பசியில் வாடவிடாது பார்க்கும் மார்க்கத்தில் போக்குவரத்துப்பிரிவில் தன்னை இணைத்துக்கொண்டு பணிபுரிந்தான். சமூகத்தின் மேம்பாட்டிற்காகவும் குடும்பத்தின் வறுமையைப் போக்கவும் பாடுபட்ட இவன், எவருக்கு என்ன துரோகம் இழைத்திருந்தான்? தவறுசெய்தவர்களிற்குக் கூட விசாரணைகளும், நீதிமன்றங்களும் சட்டப்பாதுகாப்பை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தும் மனிதஉரிமைவாதிகள் மலிந்த இத்தேசத்தில் தவறே செய்யாத இவனுக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது ஏன்? தட்டிக்கேட்காமல் தொடர்ந்தும் தலைகுனிந்து, மௌனம் காத்து நிற்பது தர்மமாகுமா? நிராயுதபாணிகளைக் குறிவைத்து கொலை செய்வதுதான் வீரம்செறிந்த போராட்டத்தின் விளைவு.

*அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே!*

குடும்ப உறுப்பினரின் பசியை விரட்ட பாடுபட்ட இந்த இளைஞன் கொலையுண்டது எந்தவகையிலும் நியாயமானது அல்ல என்பதை எடுத்து உணர்த்தும் வகையில் உங்கள் குரலை ஓங்கி ஒலியுங்கள்.

(C/18644)

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி**

# கண்ணீராய் சொரிகிறது குருதி...!



## ஸ்ரீஸ்கந்தராசா விமலேஸ்வரன்

**கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில் அகாலமாய்**
**அநியாயமாய் உயிர் பிரிந்த நண்பனே!**
**சேவை நோக்குடன் தொண்டில் ஈடுபட்டு நின்றாய்!**
**தேவையை உணர்ந்து சேவையைப் புரிந்தாய்! நீ சிந்திய குருதி**
**இந்த மண்ணில் வாழும் மக்களின் விழிகளைத் திறக்கச் செய்யும்!**

*வலி.கிழக்குப் பிரதேச சபை.* (C/18645) **தலைவர், செயலாளர், ஊழியர்கள்.**

# தேசிய அரசு அமைப்பதற்கே அரசிலிருந்து வெளியேறினோம்

## கட்சி மாறிய எம்.பிக்கள் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.11

ஐ.தே.கட்சியுடன் இணைந்து எல்லாக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காகவே நாம் அரசில் இருந்து வெளியேறி எதிரணித் தரப்புக்கு வந்தோம்.

- இவ்வாறு ஆளும் தரப்பில் இருந்து எதிர்த் தரப்புக்குத் தாவிய 9 எம்.பிக்களும் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் 9 பேரும் நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றக் குழு அறையில செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினர். அதிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தாம் ஆளும் கட்சியை விட்டு வெளியேறியதற்கான காரணம் குறித்து அவர்கள் நேற்று செய்தியாளர்களிடம் விவரித்தனர்.

### எஸ்.பி.திஸநாயக்கா

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தெரிவித்ததாவது:-

அரசில் இருந்து நாம் வெளியேறியதற்கான காரணம் தலைமைத்துவத்துக்கும் நிர்வாக இயந்திரத்துக்கும் இடையிலான முரண்பாடாகும்.

ஜனாதிபதி தான் நினைத்ததைத் தான் செய்கிறார். ஏனையவர்கள் சொல்வதைக் கேட்கும் நிலையில் அவர் இல்லை. அதிகாரம் ஒன்றே அவரது குறிக்கோள். அவருடைய சிந்தனை எல்லாம் 2006ஆம் ஆண்டுவரை எப்படி ஆட்சியில் இருப்பது என்பதுதான்.

இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர விடுதலைப் புலிகளுடன பேச்சு நடத்தும் எண்ணம் பொ.ஐ.மு. அரசுக்கு இல்லை - என்றார்.

நாம் தற்போது ஐ.தே.கட்சியில் சேரவில்லை. ஆனால் எதிர்க்கட்சி வரிசையில் இருந்துகொண்டு சுயாதீனமாகச் செயற்படுவோம்.

இது குறித்து ஐ.தே.கட்சியுடன் நாங்கள் ஒப்பந்தம் ஒன்றையும் செய்துள்ளோம்.

### மஹிந்த விஜேசேகர

மஹிந்த விஜேசேகர தெரிவித்ததாவது:-

அனைத்துக் கட்சிகளும் இணைந்து உருவாக்கப்படும் தேசிய கூட்டு அரசாங்கம் முதலில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டும். சாதகமான பேச்சு மூலம் ஐக்கிய இலங்கைக்குள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

பிரபாகரனுக்கு எதையும் கொடுக்காமல் இதனைச் செய்யமுடியாது. அதனால் தமிழ்மக்களின் உரிமைகளை வழங்கவேண்டும் - என்றார்.

ஏனைய எம்பிக்களும் இத்தகைய கருத்துக்களையே மீண்டும் மீண்டும் தெரிவித்தனர். (ம)



நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அரச தரப்பு அதிருப்திக் குழுவினரான மஹிந்த விஜேசேகர, ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸநாயக்கா ஆகியோர் தங்கள் தரப்பு நியாயங்களை விளக்கிக் கொண்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம்.

# நாடாளுமன்றைக் கலைக்க முன் நேற்றிரவு ஜனாதிபதி ஆலோசனை

நாடாளுமன்றைக் கலைக்கும் உத்தரவை நேற்று நள்ளிரவு விடுக்க முன்னர் -

தமது அரசு எதிர்நோக்கும் அரசியல் நெருக்கடிகள் குறித்துத் தமது தரப்பு எம்.பிக்களை நேற்றிரவு ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து அவர்களுடன் சுமார் இரண்டு மணிநேரம் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

அக்கூட்டத்தில் பங்குபற்றிய அரசுத் தரப்பு எம்பிக்கள் பலரும் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைதது புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடுவதே உகந்தது எனக் கருத்து வெளியிட்டனர்.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும் இதே கருத்தையே அங்கு வலியுறுத்தியதாகத் தெரியவந்தது.

பலதரப்புக் கருத்துக்களையும் ஜனாதிபதி குமாரதுங்க செவிமடுத்தார். ஆனால் தமது முடிவு எதனையும் அவர் அங்கு வெளியிடவில்லை.

அரசுத் தரப்பு எம்.பிக்களுடன் ஆலோசனை நடத்திய பின்னர் நேற்று நள்ளிரவு ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் உரை ஏதும் நிகழ்த்தவில்லை.

ஜனாதிபதியின் முடிவை தகவல் பணிப்பாளர் இன்று அதிகாலை பத்திரிகை நிறுவனங்களுக்கு வெளியிட்டார். (உ)

## 13 எம்.பிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தனாவின் சட்டையைப் பிடித்து இழுதது்த் தடுத்து நிறுத்த முயன்றார்.

உடனே, ஐ.தே.கட்சியின் எம்.பிக்கள் சிலர் ஓடிவந்து மேர்வின் சில்வாவின் பிடியிலிருந்து அவரை விடுவிக்க முயன்றனர். அப்போது பராக்கிரம எம்.பியை நோக்கி ஆளுந தரப்பிலிருந்து கோவைகள், புத்தகங்கள் பறந்து வந்தன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மேர்வின் சில்வாவின் பிடியிலிருந்து பராக்கிரமவை விடுவித்து எதிர்க்கட்சிப் பக்கம் நகர்த்தினார்.

அதையடுத்து 10 நிமிடங்கள் கழித்து முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி.திஸநாயக்கா, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மகிந்த விஜேசேகரா, விஜேபால மெண்டிஸ் மற்றும் எதிர்வீர பிரேமரத்ன, ஆனந்த முனசிங்க, ஜயசுந்தர விஜேக்கோன் ஆகிய ஏழு பேருமே எதிர்க்கட்சி நுழைவாயில் மூலம் சபைக்குள் நுழைந்து, எதிர்க்கட்சியினரின் ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர்.

ஐ.தே.கட்சி எம்.பிக்கள் கரகோஷம் செய்து அவர்களை வரவேற்றனர்.

இந்த ஒன்பது பேரோடு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எம்.பிக்கள் நால்வரும் எதிரணியுடன் இணைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகரும் முன்னாள் இராணுவப் பேச்சாளருமான மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க, பிரதி அமைச்சர் லஷ்மன் கிரியெல்ல ஆகியோர் இன்று எதிரணித் தரப்புக்கு மாறுவர் எனக் கொழும்புச் செய்தி வட்டாரங்களில் நேற்றுப் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் நேற்றிரவு ஜனாதிபதி மாளிகையில் அரசுத் தரப்பு எம்.பிக்களுக்கு நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்ட இந்த இருவரும், தாங்கள் அணி மாறப்போவதில்லை என்று அங்கு வைத்துத் தெரிவித்தனர்.

அந்தக் கூட்டத்தில் பேசிய அரசுத் தரப்பு முக்கியஸ்தர்கள் சிலர், தங்கள் தரப்பிலிருந்து இருவர் நிச்சயமாக நாளை (வியாழனன்று) எதிர்த் தரப்புக்கு மாறுவர் என்றும் -

அவர்களுள் ஒருவர் தமிழர் என்றும் - குறிப்பிட்டனர்.

அப்போது கூட்டத்தில் கலந்துகொண்ட எல்லோரும் கூட்டத்தின் மத்தியில் இருந்த கணேமூர்த்தி எம்.பியைத் திரும்பிப் பார்த்தனர். அவர் திட்டவட்டமான பதில் எதனையும் அளிக்கவில்லை.

இதற்கிடையில் -

அரசுத் தரப்பில் அதிருப்தியாளர் எனப் பேசப்பட்ட நந்தமித்ர எக்கநாயக்கா எம்.பி. தற்போது வெளிநாடு சென்றுள்ளார். இன்று நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அரசுத் தரப்பில் வாக்களிப்பதற்கு அவர் சபையில் பிரசன்னமாகியிருக்கமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# விமானப் படை முகாம் மீது திருமலையில் புலிகள் தாக்கு!

## 4 பேர் பலி; 10 பேரைக் காணவில்லை

திருகோணமலை,ஒக்.11

திருகோணமலை - அநுராதபுரம் வீதியில் அமைந்துள்ள வெல்வேரி விமானப்படை முகாம் மீது நேற்றுமுன்தினம் நள்ளிரவு விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் 4 விமானப் படையினர் பலியாகினர்; 10 பேர் காணாமல் போயினர்; மேலும் 7 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 11.30 மணிக்கு இந்தத் தாக்குதல் ஆரம்பமானது. சுமார் இரண்டு மணி நேரம் அங்கு கடும் சண்டை இடம்பெற்றது. அதன்பின்னர் சுமார் ஒரு மணி நேரம் முகாம் முழுமையாகத் தமது கட்டுப்பாட்டின் கீழ் இருந்ததாகப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மோதலில் தமது தரப்பில் மேஜர் பாபு (தெய்வேந்திரன் சிவகுமாரன் - விஸ்வமடு), 2ஆம் லெப்டினண்ட் நித்தியன் (சிவகுருபத்மநாதன் - திருகோணமலை) ஆகிய இருவர் உயிரிழந்ததாகவும் -

50 கலிபர் துப்பாக்கிகள் உட்படப் பல ஆயுதங்களைத் தாங்கள் கைப்பற்றியுள்ளதாகவும் -

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

முகாம் மீதான தாக்குதலைப் புலிகள் ஆரம்பித்த உடனேயே அந்த இடத்துக்கு விரைந்த விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் முகாமைச் சுற்றி இருந்த பகுதிகளில் கடும் குண்டுத் தாக்குதல்களை நடத்தின. (ம-4-145)

# நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என்று நேற்றுக் கூறியிருந்தார் பிரதமர்

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பொ.ஐ.முன்னணி அரசு தோற்கடிக்கப்பட்டாலும் நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்படமாட்டாது.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயகா நேற்று இரவு நாடாளுமன்றம் கலைக்கப்பட முன்னர் இவ்வாறு தெரிவித்திருந்ததாக செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றிரவு தகவல் வெளியிட்டிருந்தது.

பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அவசரக் கூட்டம் ஒன்று நேற்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார் எனக் கூறப்பட்டது.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நம்பிக்கையில்லாப் பிரேரணை வியாழனன்று வாக்கெடுப்புக்கு விடப்படும்போது அதில் ஐ.தே.கட்சி தோல்வியடையும் என்பதில் சந்தேகம் இல்லை. எனினும் அரசின் கொள்கைகளைச் சிரைப் புரிந்துகொள்ளாத சில அரச தரப்பு எம்பிக்களை ஐ.தே.கட்சி தனது கைப்பொம்மைகளாக ஆட்டி வைத்து நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றிபெற முயற்சிக்கின்றது. ஆனால, அது நிறைவேறாத ஆசை.

ஒருவேளை இந்தப் பிரேரணையில் ஐ.தே.கட்சி வெற்றிபெற்று இந்த அரசு கலைக்கப்பட்டாலும் நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என்று உறுதியாகக் கூறுகின்றேன் - என்றார்.

என்றாலும் பின்னர் நேற்று நள்ளிரவு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூட்டத்தில் பேசும்போது ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தனது நன்றியைத் தெரிவித்த பிரதமர், அரசில் இருந்து நேற்று வெளியேறிய அதிருப்தி எம்.பிக்களை கடுமையாக விமர்சித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

நேற்றைய கூட்டத்தில் அரசுமீது அதிருப்தி கொண்டுள்ள எம்.பிக்கள் பலர் கலந்துகொள்ளவில்லை என்றும் கூறப்பட்டது.

இது அரசுத் தரப்புக்கு மேலும் அதிர்ச்சியைத் தந்ததாகச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார். (ம-4)

### ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கும்படி நேற்றுக் கோரப்பட்டது

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றிருக்கும் ரணிலை பிரதமராக நியமிக்கும்படி ஜனாதிபதியைக் கோரும் கடிதம் ஒன்றில், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்பங்களைப் பெறும் நடவடிக்கை நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றது.

பொ.ஐ.மு. தரப்பிலிருந்து எதிர்க்கட்சிகளின் தரப்புக்கு மாறிய அரசுத் தரப்பு அதிருப்திக் குழு எம்.பிக்கள், தமிழ்க்கட்சிகளின் எம்.பிக்கள் உட்பட பலரும் இந்தக் கடிதத்தில் ஒப்பமிட்டிருந்தனர். (உ)

## முதியோர், சிறுவர் தினவிழா

வேலணை,ஒக்.11

தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச முதியோர், சிறுவர் தின விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலர் செ.இரத்தினம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தீவகக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வுக்கு கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட முதியோர்கள் கௌரவிக்கப்படுவதோடு சிறுவர், முதியோர் தினப்போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(ம-167)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுமுகம் தொண்டமானுடன் இ.தொ.காங்கிரஸின் எம்.பிக்களான ஆர்.யோகராஜன், எஸ்.ஜெகதீஸ்வரன், முத்து சிவலிங்கம் ஆகியோரும் எதிர்த்தரப்புக்கு மாறியதாக அறிவிக்கப்பட்டது.

"மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு சேவை செய்யவே அமைச்சர் பதவியை ஏற்றேன். அவர்களது எதிர்காலத்தைக் கவனத்திற் கொண்டே எனது பதவியை இராஜினாமாச் செய்தேன்." - என்று பின்னர் கூறினார் அமைச்சர் தொண்டமான். (உ)

ஸ்ரீலஸ்ரீல் சென்ரர்
நெல்லியடி
போட்டிப் பரீட்சை
பயிற்சி வகுப்புக்களும்
பாடக்குறிப்பும் வழங்கப்படும்.
ஆரம்பம்:- 12.10.2001 பி.ப. 4-6
I எழுதுவினைஞர்
II கூட்டுறவு அபிவிருத்தி
உத்தியோகத்தருக்கு உரியது.
ஆசிரியர்: தவசேகர்
(93286)

# மரண அறிவித்தல்

## கார்த்தி பொன்னர்

புத்தூர் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்தி பொன்னர் நேற்று (10.10.2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னாச்சியின் அன்புக் கணவரும், கந்தசாமி, சேதுபதி, கதிரமலை ( பிரதேச செயலகம், கோப்பாய்), கிருஷ்ணமூர்த்தி (ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி), நடேசு, செல்வராணி ஆகியோரின் அன்பு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2001) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புத்தூர் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமாரசாமி வீதி,*
*புத்தூர் கிழக்கு,*
*புத்தூர்.*

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C/18646)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.